# குடும்பநலச் செய்திக்கதிர்

மலர் 8
இதழ் 7
நவம்பர் 1978



தமிழ்நாடு குடும்பநலத்துறை வெளியீடு



.. 'கேரவான்' பத்திரிகை சார்பில், பேட்டி கண்ட திரு எஸ். எம். நாராயணனுக்கு, அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தர ராசன் அவர்கள் தமிழ்நாட்டில் மருத்துவ நல்வாழ்வு—குடும்பநலப் பணிகள் பற்றி விளக்கிக் கூறுகிருர்.

சென்னை எழும்பூர் தாய்—சேய் மருத்துவமனையில் எதிர்பாராத விதமாக இறக்க நேரிட்ட தாய்மார்களின் குடும்பத்தாருக்கு தமிழ்நாடு அரசின் ரூ. 10,000-ஐ அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தர ராசன் வழங்குகிருர். செயலாளர் திரு. பி. முராரி அவர்களும், இயக்குநர் டாக்டர் சி. ஞானதேசிகன் அவர்களும் உடனிருக்கிருர்கள்.




திருச்சி மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் தொழுநோய்த் தடுப்புத் திட்டப் பணியாளர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி முகாமை, அமைச்சர் திரு. திருச்சி ஆர் சௌந்தரராசன் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுகிருர்.

திருச்சியில் நடைபெற்ற 'விரிவுபடுத்தப்பட்ட நோய்த்தடுப்பு ஊசித் திட்டம்' குறித்த பயிற்சி முகாம் நிறைவு விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. சங்கர் அவர்களிடமிருந்து, கோவை மாவட்ட நல் வாழ்வு அலுவலர் டாக்டர் கேப்டன் டி. என். ஆத்மராமன் நற்சான்றிதழைப் பெறுகிருர்.






நீலகிரி மாவட்டத்திற்கு வருகைதந்த சென்னை தொலைக்காட்சி நிலயத்தாருக்கு டாக்டர் காணிக்கராஜ் பேட்டியளிக்கிருர்.








கருத்தரங்கில் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகிருர்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பெரியார் அஞ்சல் தலையை வெளியிட்டு, மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களிடம் 'ஆல்பம்' வழங்குகிருர்.

தந்தை பெரியார் அவர்களின் தொண்டினை விளக்கி ஊர்வலத்தில் வந்த அலங்கார ஊர்திகளில் ஒன்று.

159830

நல்வாழ்வுத்துறை அமைச்சர்

திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன்

# குடும்பநலத் திட்டத்தினுல்தான் அமைதி நிலவும்! அன்பு சுரக்கும்! பண்பு நிலைக்கும்!

[சென்னை தண்டையார்பேட்டை துறைமுகக் காலனி திடலில் 16—8—78 அன்று துவங்கிய குடும்பநல இசை, நடன, நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் அவர்கள் ஆற்றிய உரை.]


மத்திய அரசின் துணையோடு முத்தமிழுக்கே சொந்தமான இயல், இசை, நாடகம் வாயிலாகக் குடும்பநலக் கருத்துக்கள் குறித்த கலைவிழா இன்று துவங்கி நடக்கிறது. இங்கே நடைபெற்ற நாடகத்தினுடைய மையக் கருத்து எப்படிப்பட்ட தியாக உள்ளங்களுக்குச் சொந்தக்காரராக எதிர்காலத்தில் இந்த நாட்டை உருவாக்குகின்றவர்கள் இருக்க வேண்டுமென்பதை, சிறிய நாடகமாக இருந்தாலும் மிகப் பெரிய கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

நம்முடைய தமிழ்நாட்டில் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணு அவர்களும், இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும், எந்தக் கருத்தை இந்த நாட்டிலே வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிருர்களோ அந்தக் கருத்துக்களுடைய மையமாக இந்த நாடகத்தை நடத்தியிருக்கிருர்கள். பண ஆசை பிடித்து வரதட்சனை என்ற அந்த அரக்கனுக்கு அடிமையாகி விட்டவரையும் கண்டோம். தேவைக்கு அதிகமான குழந்தைகளைப் பெற்ருல் எப்படிப்பட்ட துன்பங்களெல்லாம் வந்து சேரும் என்பதையும் பார்த்தோம்.

குடும்பத்தைப் பெரிதாக அமைத்துக் கொள்ளாமல், போதுமென்ற மனமே பொன் செய் மருந்து என்ற முறையில் குழந்தைகளை அளவாகப் பெற்று வாழ்ந்தால்தான் குடும்பப் பொருளாதாரம் சிறக்கும். குடும்பங்கள் நன்ருக இருந்தால்தான் நாட்டுப் பொருளாதாரம் ஓங்கும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

குடும்ப நலத் திட்டம் குழந்தைகள் நல்வாழ்வில் அதிக அக்கறை காட்டுகிறது. பிறந்து விட்ட குழந்தைகள் நோய் நொடிக்கு ஆளாகாமல் நிச்சயமாக உயிர் வாழும் என்ற நம்பிக்கையை மக்களுக்குத் தர மருத்துவ வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டுள்ளன. அரசு இலவசமாகச் செய்து தந்துள்ள வசதிகளையெல்லாம் நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டொரு குழந்தைகள் இருந்தால் அந்தக் குடும்பத்தில் இன்பம் சேரும். அமைதி நிலவும். அன்பு சுரக்கும். பண்பு நிலைக்கும். பதட்ட நிலை இருக்காது. பெற்ரேருக்கும் குழந்தைகளுக்கும் இடையில் நல்ல உறவு வளரும். இத்தனைக்கும் குடும்பநலத் திட்டம் பாலமாக அமையும். எனவே இத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்!





கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி

260

# குடும்பத்தில் கூட்டுறவு நிலைக்கக் குடும்பநலம் உதவும்!

[சென்னை தண்டையார்பேட்டை துறைமுகக் காலனி திடலில் நடைபெற்ற இசை, நடன, நாடக நிகழ்ச்சியை 16—8—78 அன்று துவக்கி வைத்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தனக்கென்று தனியொரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டத்திற்கெனச் செய்யப்படும் பிரச்சார முறைகளே அலாதியானது. இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் மூலம் சிறு குடும்பநெறி மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது.

குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் எந்த விதக் கட்டாயமும் இல்லை. நாட்டு மக்கள் திட்டத்தினுடைய அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு கணவனும் மனைவியும் ஒருமனப்பட்டு விரும்பி ஏற்க வேண்டும்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்று சொல்லி வருகிருேம். குடும்ப நல்வாழ்வுக்கும் கணவன், மனைவியிடத்தில் கூட்டுறவு ஓங்க வேண்டும். கூட்டுறவு அவர்களிடையே மலிந்தால்தான் திட்டமிடும் நிலை உருவாகும். குழந்தைகளின் தேவைகளை உணரும் வாய்ப்புக் கிட்டும். குழந்தைகள் சரியாக வளரச் சத்துணவு தேவை. ஊட்டச்சத்து மிக்க உணவுகள் தந்தால்தான் அவர்களுக்கு நல்ல வளர்ச்சி கிட்டும். எதை எதை அளிப்பது, கல்வி எப்படித் தருவது—மற்ற வசதிகளை எந்த வழியில் செய்து தருவது என்பது போன்றவற்றையெல்லாம் கலந்துரையாடி கணவனும் மனைவியும் முடிவுகள் மேற்கொள்ள கூட்டுறவு அவர்களிடையே அவசியம்.

குடும்பத்தில் கூட்டுறவு வளர்ந்திட வேண்டுமானுலும் பெற்ருேரின் கூட்டுறவே அதற்கு உதவும். இவை அத்தனைக்கும் அடிப்படையாக அமைவது சிறுகுடும்ப நெறி என்பதுதான். ஆக நாட்டில் குடும்பக் கூட்டுறவு நிலைத்தால்தான், மற்ற மற்ற முயற்சிகள் வெற்றி பெறும். அதற்குக் குடும்ப நலம் மிக மிக இன்றியமையாததாகிறது.

குடும்பநலத் திட்டத்தை பாமர மக்களிடையே பரப்ப நாடக நடன நிகழ்ச்சிகளைக் கையாள்வது பாராட்டுக்குரிய முயற்சியாகும். இதனுலே கருத்துக்களும் பரவும். பொழுது போக்கு என்ற ஒன்றும் அவர்களுக்குக் கிட்டுகிறது. பொதுமக்கள் திட்டத்தின் நன்மையைக் கருதி அவர்களாகவே ஏற்க முன் வரவேண்டும்!



போக்குவரத்துத்துறை அமைச்சர்

**திரு. சி. பொன்னையன்**

# குடும்ப நலம் பற்றிச் சொல்லும்போது சத்துணவு பற்றியும் கூறவேண்டும்

[சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள மாநிலக் குடும்பநலச் செயலகத்தில் 8—9—78-ஆம் நாள் நடந்த குடும்ப நல இசை, நடன, நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை.]

குடும்பநலத் திட்டம் எந்த அளவுக்குத் தீவிரப்படுத்தப் பட்டு வருகிறது என்பதையும், இதனால் தமிழகத்தில் பொருளாதார அளவில் நடுநிலையிலும், தாழ்நிலையிலும் இருக்கும் மக்களுக்கு நலன்கள் கிட்டுகின்றன என்பதனையும் எண்ணிப் பார்க்கின்ற போது, குடும்பநலத் திட்டத்தைப் பொறுத்து மாநில அரசாக இருந்தாலும் சரி, மைய அரசாக இருந்தாலும் சரி செலுத்தி வருகின்ற கவனம் எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை நம்மால் உணர முடிகிறது.

தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும் குடும்பநல மேம்பாட்டுத் திட்டத்தில் பாரதத்திலேயே நாம் முன்னிலையில் இருப்பதாக அறிகிறோம். திட்டத்தை தீட்டுகின்ற அரசு, அந்தத் திட்டத்தின் பலன் மக்களுக்குச் சென்று அடைகின்றதா என்பதைக் கண்காணிக்கின்ற முறையில்தான் எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டம் வெற்றிகரமாக அமையக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மற்ற மாநிலங்களை விடத் தமிழகத்தில் இத்திட்டம் வெற்றி பெறுகிற நிலை இருக்கின்றதென்றால், அதனுடைய சிறப்பு, இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்ற அரசு இயந்திரத்துக்குத்தான் போய்ச் சேர வேண்டுமென்பது என்னுடைய எண்ணம்.

குறிப்பாக 70 சதவிகித மக்களுக்கும் மேல் படிக்காத பாமரமக்களாக இருக்கிற இந்தச் சூழலில், குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தை மக்களுக்கு நல்ல பயன் அளிக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் இசை, நடன நாடக நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருக்கும் என கருதுகிறேன்.

படியாத மக்கள், சாதாரண பாமர மக்கள், எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் கதைகள் மூலமாகவும் பாடல்கள் மூலமாகவும், நாடகமாகவும் வடித்துக் கொடுக்கின்ற போதுதான், மக்களுடைய மனதில் இந்தத்திட்டத்தினுடைய அவசியத்தை பதிய வைக்க முடியும். அந்த வகையில் இன்றைக்கு நாம் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்.

இந்தத் திட்டத்தினுடைய பெரும் பலன் கிராம மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். குடிசை வாழ் ஏழை எளிய மக்களுக்கு இந்தக் கருத்துக்கள் போய்ச் சேர வேண்டும்.

இவற்றையெல்லாம் அறியாது வறுமைச் சூழலில் இருக்கின்ற அந்த மக்கள், பொழுது போக்கு வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. அறியாமையில் உள்ள அந்த மக்களுக்குக் குடும்பநலத் திட்டத்தை உணர்த்த வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதற்காக நாம் எடுக்கும் இத்தகைய முயற்சிகளால் நற்பலனை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் மூலம் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் போதும் என்று வலியுறுத்துவதோடு நின்று விடாமல் அந்த அறியாத மக்களுக்கு அல்லது படித்த மக்களுக்கும் கூடச் சத்துணவு வழங்குவது ஏன்—எந்தெந்த உணவுகளில் என்னென்ன சத்து இருக்கின்றது — கருவுற்ற தாய்க்கு என்னென்ன சத்துணவு தேவை என்பதையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். குழந்தைகளுக்கு நுண்ணறிவு ஏற்பட எத்தகைய சத்துணவு அவசியம். எந்தெந்த உணவுகளில் புரதச் சத்து இருக்கிறது. புரதச் சத்துக் குறைவால் அந்த குழந்தை எந்த அளவு நலிவைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதையெல்லாம் நாடகம் மூலமாக எடுத்துச் சொன்னால் மக்களுக்கு நல்ல முறையில் விளங்கும். அவற்றையெல்லாம் மக்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வார்கள். சிறுகுடும்ப நெறியும் ஓங்கும் என்பதைத் தெரிவித்து விடை பெறுகிறேன். **வணக்கம்!**





உள்ளாட்சித்துறை அமைச்சர்

**திரு. கா. காளிமுத்து**

# ஏழை எளிய மக்கள் முந்த வேண்டும் !

(சென்னை சைதாப்பேட்டையில் 8—9—78-ஆம் நாள் நடைபெற்ற குடும்ப நல இசை, நடன, நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் ஆற்றிய உரை)

குடும்பநலத் துறையினர் மத்திய அரசு கலைக் குழுவினர் உதவியுடன் குடிசைப் பகுதியில் கலை நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதுபோன்ற கலை நிகழ்ச்சிகள் மேட்டுக் குடிமக்கள் பார்த்து ரசிக்கும் வண்ணம் சபாக்களில் நடப்பதுதான் வழக்கம்! அதை மாற்றி, குடிசைப் பகுதி மக்களுக்காக இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்த குடும்பநலத்துறையினரை நான் அரசின் சார்பில் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகக் குடும்பநலத் திட்டம் ஏழை எளிய மக்களாலே பெரிதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அந்த மக்களிடத்தில் இத்தகைய கருத்துக்களைக் கொண்டு சேர்க்க, இந்த நிகழ்ச்சிகளை நடத்துவது பெருமைக்குரியது-பாராட்டுக்குரியது.

குடும்ப நலத் திட்ட விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய கருத்து இன்னும் எனக்குப் பசுமையாக உள்ளத்தில் உள்ளது. இருவர் சந்திக்கும் பொழுது உங்களுக்குக் குழந்தை குட்டி எத்தனை என்று கேட்கிறோம். ஏன் அப்படிக் கேட்கிறோம் தெரியுமா எனக்கூறி, அண்ணா அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார்கள். 'முதலில் பிறக்கும் ஒன்றிரண்டு குழந்தைகள் பிறந்ததும் அக் குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொஞ்சுவது—விளையாடுவது—மழலை கேட்டு இன்புறுவது என்ற நிலை இருக்கும். இரண்டுக்கு மேலே மூன்று, நான்கு, ஐந்து என்று போகிறபோது, குழந்தையாக மதிக்கத் தோன்றாது. குட்டி என்றுதான் நினைக்கத் தோன்றும். தொல்லை ஏற்படும்' என்று அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

புதுக் கவிஞர் ஒருவர் எழுதிய கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

'பிள்ளை வேண்டுமென்று
பெண்கள் அரசைச் சுத்தியது அந்தக் காலம்
பிள்ளை வேண்டாமென்று
அவர்களை அரசு சுற்றுவது இந்தக் காலம்'

என எழுதியிருந்தார்கள். அந்த அளவுக்கு மக்களது நல்வாழ்விலே நாட்டம் கொண்டிருக்கிற காரணத்தாலே தான், அரசு இந்தப் பிரச்சாரத்தை முனைப்பாகச் செய்து கொண்டிருக்கிறது.

கடந்த காலத்தில் இந்தப் பிரச்சாரம் கொஞ்சம் கடுமையான கட்டத்திற்குப் போய், அதிகார வற்புறுத்தல் என்ற நிலைமைக்குப் போன காரணத்தினால்தான், ஓரளவு மக்கள் இத் திட்டத்தைப் புறக்கணிக்கும் சூழல்கள் உருவாகின எனலாம். தமிழகத்திலே அல்ல. வட மாநிலங்களில் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இதை நயமான பிரச்சார முறையின் மூலமாக—இனிமையான விளக்க உரைகளின் மூலமாக—உற்சாக மூட்டும் நிகழ்ச்சிகளின் மூலமாகத்தான் இத்திட்டம் பரப்பப் பட வேண்டும் என அரசு கருதுகிறது. குடும்ப நலத்தைப் பேணிக் கொள்ள ஏழை எளிய மக்களின் குடும்பங்கள் முந்த வேண்டும் என்பதற்காக இத்தகைய பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மக்கள் அதைப்புரிந்து, விரும்பி ஏற்க முன் வர வேண்டும். இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை நல்கிய குடும்ப நலத் துறையினருக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்!



சமூக நலத்துறை அமைச்சர்

**செல்வி பி. டி. சரஸ்வதி**

# ஆஸ்திக்கொன்றும் ஆசைக்கொன்றும் போதும்!

[சென்னை வட அகரம் சூளை மேடு பகுதியில் 1—9—78-ஆம் நாள் நடைபெற்ற குடும்பநல இசை, நடன, நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்கள் ஆற்றிய உரை.]

தமிழ் நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பதில் அமைச்சர் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன். சமூக நலத்துறை அமைச்சர் என்ற அளவில், மகளிர் நலத்தைக் காண வேண்டிய பெரிய பொறுப்பு எனக்கு இருக்கிற காரணத்தால், இந்த விழாவிற்கு அழைத்தவுடன், எப்படியாவது கலந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறையோடு வந்து கலந்து கொண்டுள்ளேன்.

குடும்பநலத் திட்டத்தை இன்றுதான் தெரிவித்திருக்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். பல ஆண்டுகளுக்கு முன்பாகவே திருமதி மார்கரட்சாங்கர் என்பவர் இத்திட்டத்தை உலகம் முழுவதிலும் பரப்பி இருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் பகுத்தறிவுச் சிங்கம் என்று பாராட்டப்படுகின்ற வணக்கத்துக்குரிய தந்தை பெரியார் அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்பாகவே குடும்ப நலத்திட்டத்தை வலியுறுத்தும் வண்ணம் 'கர்ப்ப ஆட்சி' என்ற புத்தகத்தை எழுதியிருப்பது பலருக்குத் தெரிந்துமிருக்கலாம், அல்லது தெரியாமலுமிருக்கலாம்.

ஏறக்குறைய 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்னால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், குடும்பநலத் திட்டத்தை வலியுறுத்தி எழுதியிருப்பதை நீங்கள் சிலர் அறிந்திருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றதென்ற போதிலும், இன்னும் துரிதமாக இயங்க வேண்டுமென்ற காரணத்தால், கலை நிகழ்ச்சிகளை சென்னையிலுள்ள 30 குடிசைப் பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன. பொழுது போக்காகவும், அதே நேரத்தில் கருத்து விளக்கம் பெறவும் இந்த நிகழ்ச்சிகள் வாய்ப்பாக அமைந்துள்ளன. குறிப்பாக மத்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றின் சாதனைகளை நீங்கள் தெரிந்து கொள்ள இந்நிகழ்ச்சிகள் வாய்ப்பளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

நான் தாய்மார்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். குடும்ப நலத் திட்டத்திற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். ஐந்து குழந்தைகள் இருக்கின்ற இடத்தில், இரண்டே குழந்தைகள் இருந்தால் எத்தனை சீரோடும் சிறப்போடும் வளரும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆஸ்திக்கு ஒன்றும், ஆசைக்கு ஒன்றும் இருந்தால் போதும். அந்த வகையில் இந்தக் குடும்பநலத் திட்டத்திற்கு நீங்கள் ஆதரவு தர வேண்டுமென்று நாட்டு மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.





கைத்தறித்துறை அமைச்சர்

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்**

# குழந்தை நலம் காக்க தாய்மார்கள் குடும்ப நலம் ஏற்க வேண்டும்

[சென்னை செம்பியம் திரு. வி. க. நகர் பேருந்து நிலையத்தின் அருகில் 29-8-78-ஆம் நாள் நடைபெற்ற குடும்பநல இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு தமிழ் நாடு அரசு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் ஆற்றிய உரை.]

குடும்ப நலத் திட்டம் இவ்வளவு சிறப்புப் பெற ஆரம்பகாலத்தில் அரும்பாடுபட்டவர் திருமதி மார்கரட் என்ற பெண்மணியாவார்.

குடும்பநலத் திட்டம் ஒரு தாய்-சேய் நலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடும்ப நலத் திட்ட விளம்பரம் நல்ல முறையில் அமைந்திருப்பது காரணமாக —நல்ல முறையில் செய்யப்பட்டு வருவது காரணமாக தமிழகத்திலே ஒரு மாபெரும் மாறுதலை நாம் கண்டிருக்கிறோம்.

படித்தவர்களிடையே மட்டுமில்லாமல் படிக்காத பாமர மக்களிடையேயும், நடுத்தர மக்களிடையேயும் தான் இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல் பட வேண்டும். குறைந்த வருமானமுடையவர்கள் குடும்பத்தில் குழந்தைகள் அதிகமிருந்தால் எந்தளவு சிரமப்படுவார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். அந்த வருமானத்தைக் கொண்டு போதிய அளவு சத்துணவை அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்க முடியாமல் போகிறது. அதன் காரணமாகக் குழந்தைகள் நலிவுறும் நிலை சூழல் ஏற்படுகிறது.

குறிப்பாகச் சென்னையில் வாழும் பெண்கள்—பணியாற்றும் பெண்கள் அதிகக் குழந்தைகளைப் பெற்று விட்டால், பெருந் தொல்லைக்கு ஆளாக நேரிடுகிறது. ஒரு குழந்தை பிறந்து நீண்ட இடைவெளிக்குப் பின் இன்னொரு குழந்தை பிறப்பதுதான் தாய்க்கும் நல்லது. குழந்தைக்கும் நல்லது.

பணியாற்றும் பெண்கள் இரண்டொரு குழந்தைகளை வளர்ப்பதே சிரமமான காரியம். உத்தியோகத்துக்கும் செல்ல வேண்டும், வீட்டில் குழந்தைகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது கடினமான காரியம். இதை நான் அனுபவப் பூர்வமாக அறிந்திருக்கிறேன்.

ஒரு பள்ளியிலே பணியாற்றும் போது ஒரு குழந்தைக்குத் தாயாகும் வாய்ப்பைப் பெற்றேன். மிக நல்ல முறையில் போற்றி வளர்க்கக் கூடிய சூழ்நிலையும் இல்லை. பணிக்குச் செல்லும்போது இன்னொருவருடைய பொறுப்பிலே விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. யாருடைய பொறுப்பிலே விட்டுச் செல்கின்றோமோ அவருடைய மன இயல்புகள் எப்படியிருக்கும், பழக்க வழக்கங்கள் எப்படியிருக்கும் என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் அளவுக்குத் திறமையானவராக ஒருவர் கிடைக்காவிட்டால், கிடைத்தவரிடம் அந்தக் குழந்தையை ஒப்படைத்துவிட்டு நாம் பணிக்குச் செல்ல வேண்டியதாகி விடுகிறது. அவர் அந்தக் குழந்தையை எப்படி வளர்க்கின்றார்—நேரம் தவறாமல் உணவு கொடுக்கிறாரா-சுத்தமாகக் குழந்தைகளை வைத்துக் கொள்கிறாரா என்பது போன்ற விஷயங்களை நம்மால் கவனிக்க இயலவில்லை. இது மனதிற்கு வேதனையை அளித்தாலும் கூட, வேறு வழியில்லாமல் இப்படிப் பட்ட முறைகளை நாம் கையாள வேண்டியிருக்கிறது.

அந்தக் குழந்தைகளு[illegible]ய பழக்க வழக்கங்கள் நம்முடைய பழக்க வழ[illegible]களுக்கு நேர் மாறாக அமைந்து விடக் கூடிய சூழ்நிலையும் ஏற்படும். பெரும்பாலான நேரம் அந்தச் செவிலித் தாய்மார்களிடமே அந்தக் குழந்தைகள் வளர வேண்டியிருப்பதால், நம்முடைய நேரடி கவனிப்பில் வருவது மிக மிகக் குறுகிய காலம்தான். எப்படிப்பட்ட உணவு தேவை அந்தக் குழந்தைகளுக்கு என்பது போன்றவற்றையெல்லாம் நம்மால் கவனிக்க முடியாமல் போகிறது.



இந்தச் சூழ்நிலையில் அந்தக் குழந்தை ஒரு வயது அடைவதற்கு முன் இன்னொரு குழந்தையையும் பெற்று எடுக்கும் வாய்ப்பு உண்டாகி விட்டால், பெருத்த சிரம மாக முடியும்.

பொதுவாகச் சொல்வார்கள், ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டுமென்று! அதனால் தாய் முதல் குழந்தையைப் பெற்றெடுத்த போது இழந்த சக்தியைப் பெற வாய்ப்பு கிட்டுகிறது. குழந்தையையும் நல்ல முறையில் வளர்க்க முடியும்.

ஐந்து வயது வரை ஒரு குழந்தைக்கு எவ்வளவு முழுமையாகத் தாயன்பு கிட்ட வேண்டுமென்பதை நாம் அறிவோம். இரண்டு அல்லது இரண்டரை வயதை முதல் குழந்தை அடைவதற்கு முன், இரண்டாவது குழந்தை பெற்று விட்டால் அதனிடமே நம் கவனம் இருக்கும். முதல் குழந்தை ஏக்கத்திற்குள்ளாகும். அதன் காரண மாகப் பெற்றோர்களின் மீது இனந்தெரியாத ஒரு வெறுப்பு அந்தக் குழந்தைக்கு ஏற்படுகிறது. அந்த வெறுப்பு நாளடைவில் பல்வேறு கெட்ட குணங்கள் அதனிடம் ஏற்பட அடிப்படையாகி விடுகிறது என்பதை நாம் அறிகின்றோம்.

எனவே இந்தக் குடும்பநலம் என்பது தாய்மார் களுடைய நலத்தைப் பேணுகின்ற ஒரு திட்டமாக மட்டுமில்லாமல், குழந்தைகள் நலத்தைப் பேணுகின்ற திட்டமாகவும் உள்ளது.

குழந்தைகளிடத்தில் முழுக் கவனம் செலுத்தி வளர்க் கவும், தாயன்பை முழுமையாகத் தரவும் குறைவான குழந்தைகள் குடும்பத்தில் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். குழந்தைகளை முறையாக வளர்க்க நாம் அவகாசம் ஒதுக்கிச் செயல்படவும் சிறு குடும்பம் அவசியம். எனவே தாய்மார்கள் இந்தத் திட்டத்திலே முழு மூச்சாகக் கவனம் செலுத்தி தங்கள் நலத்துக்காகவும், குழந்தைகள் நலத்துக்காகவும் குடும்ப நலம் ஏற்க முன் வர வேண்டு மென்று கேட்டுக் கொள் கிறேன்.

முன்னாள் மத்திய அமைச்சர்
**டாக்டர் சுசிலா நய்யார்**

# குடும்பநலம் ஓங்க குடிப்பழக்கம் ஒழியவேண்டும்!

[சென்னை ஆமில்டன் பாலம் அருகேயுள்ள குடிசைப் பகுதியில் நடைபெற்ற இசை, நடன நாடக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றிய இந்திய நல்வாழ்வு—குடும்ப நலத்துறை முன்னாள் இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் ஆற்றிய உரை.]

நான் சென்னைக்கு வந்த சமயத்தில் குடிசைப் பகுதி ஒன்றில் நடக்கும் குடும்பநலத்திட்ட நிகழ்ச்சியைப் பார்க் கவும், அதில் கலந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பைப் பெற் றதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இப்படிப்பட்ட குடிசைப்பகுதிகளுக்குத்தான் குடும்ப நலத்திட்டக் கருத்துக்கள் அவசியமாகப் போய்ச் சேர வேண்டும். இங்கே வாழும் நமது சகோதரர்களும், சகோ தரிகளும் வறுமையில் வாழுகின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது மகிழ்ச்சி கிட்டும்படி செய்ய வேண்டும். புதுமை யான வாழ்வு கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

உங்களுக்கு நிறையப் பணம் வருமானமாகக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம். அப்படிக் கிடைக்கின்ற பணத்தைக் குடும்ப நன்மைக்காகவும் குழந்தைகள் நன் மைக்காகவும் நீங்கள் செலவிட வேண்டும் என்பதுதான் கருத்து. ஆனால் அந்தப் பணம் கள்ளுக்கடைகளில் செல வாகக் கூடாது. அதற்காக தான் நாட்டிலே மதுவிலக்குத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது முன்பு மது ஒழிக்கப் பட்ட போது பெண்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மீண்டும் மது திரும்பிய போது அவர்கள் வருத்தமுற்றார் கள். மதுவிலக்கு இப்போது செயல்படுத்தப்படுவதால் தமிழ்நாட்டு தாய்மார்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என அறிகிறேன்.

மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்கள் முழுமையாக ஒத்து ழைப்புத் தர வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கைவிட வேண்டும். இது போன்ற பகுதிகளில்தான்





கள்ளச்சாராயம் காய்ச்சும் நிலை உள்ளது. காவல் துறையினர் மட்டும் இதைத் தனியாக நின்று தடுத்து விட முடியாது, குடிசைப் பகுதி மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஏழை எளிய மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல உணவு தர வேண்டும். உடை வழங்க வேண்டும். கல்வி கொடுக்க வேண்டும். குடும்பத்திலுள்ளவர்களின் தேவை களை நிறைவு செய்ய வேண்டும். அந்தச் சூழலில்தான் குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். நாம் இந்திய மக்கள், பிறப்பிலே ஏற்றத் தாழ்வு இல்லை. வளர் வதும் எந்த வேற்றுமையும் இல்லாமல், வளர வேண்டும். நாட்டுப் பொறுப்பை பகிர்ந்து கொண்டு செயல்படுத்த வேண்டும். ஜாதி, மத வேறுபாடு காட்டக் கூடாது.

குடிப்பழக்கம் குடும்ப நலத் திட்டத்திற்குக் குந்தகம் செய்கின்றது. குடித்துவிட்டபின் எதுபற்றியும் சிந்திக்கா மல் குழந்தைகளை உருவாக்கி விடுகிறோம். குடிப்பது உடலுக்குமட்டுமல்லாது, குடும்பத்திற்கே ஊறு செய்து விடுகிறது. குடிப்பழக்கமுள்ளதால் குடும்பநலமுறைகளைப் பின்பற்றும் நிதானத்தையும் இழந்து விடுகிறார்கள்.

எனவே குடும்பநலத்திட்டம் ஓங்க வேண்டுமானால் --வெற்றி பெற வேண்டுமானால், குடிப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். நன்றி. வணக்கம்!

# பெரியார் சொல்லைக் கேட்டிருந்தால் இந்த அவலநிலை வந்திருக்குமா?

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன்

(சென்னை சேத்துப்பட்டு மங்களபுரத்தில் ஆகஸ்ட் 29-ம் நாள் நடைபெற்ற குடும்ப நல இசை நடன நாடக விழாவிற்குத் தலைமை வகித்த சிறுசேமிப்புத்துறை துணைத்தலைவர். இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். அவர்கள் ஆற்றிய உரை.)

குடும்ப நலத் துறையினர் நடத்தும் இந்த விழாவில் கலந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

குடும்பம் பெரியதாக இருக்கக் கூடாது, அதிகக் குழந்தைகளை ஈன்றெடுத்து அல்லற் படக் கூடாது— பள்ளியிலே ஒன்று, தெருவிலே ஒன்று, தொட்டிலிலே ஒன்று, இடுப்பிலே ஒன்று என்ற நிலையிலே அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பெற்று, வேதனையும் வெந்துயரும் அடையக் கூடாது, என்றெல்லாம் நாம் பல ஆண்டுகளாகவே சொல்லி வருகிறோம்.

பல ஆண்டு காலம் என்றால், பத்து வருடங்கள், இருபது வருடங்கள் என்று நினைத்து விடாதீர்கள். ஏறக் குறைய ஐம்பது வருடங்களுக்கு முன்பே, தந்தை பெரியார் அவர்கள் கர்ப்பத் தடையைப் பற்றி பேசியிருக் கிறார். உலகில் எந்தெந்த நாடுகளில் எல்லாம், அந்த முறையைக் கையாண்டு, ஆனந்த வாழ்வும் அமைதியான வாழ்வும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையெல்லாம், அவர் நடத்தி வந்த 'குடி அரசு' பத்திரிகையில் விளக்க விளக்கமாக எழுதியிருக்கிறார். குடும்பத்தில் அளவாகப் பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று, அப்பொழுதிருந்தே நமது அய்யா அவர்கள் சொல்லி வந்திருக்கிறார்.

கடவுள் தருகிறார் குழந்தையை, அதை வேண்டா மென்று சொல்வது பாவமல்லவா, அப்படிச் செய்தால் நரகம் அல்லவா கிட்டும் என்று மக்களில் பெரும் பாலோர் அப்போது நினைத்தார்கள். கடவுளை எதிர்க்கும் பெரியார் கடவுள் தரும் குழந்தையையும் வேண்டாம் என்று சொல்லுகிறார் என்று அலட்சியமாக நினைத்து விட்டார்கள். அவர் அப்படித்தான் பேசுவார் என்று கேலி பண்ணியவர்களும் உண்டு. கிண்டல் செய்தவர் களும் உண்டு.

அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு பெரியார் அவர்கள் சொன்னதின் முழு அர்த்தமும்—இப்போதுதான் எல்லோ ருக்கும் புரியத் தொடங்கியிருக்கிறது. அப்பொழுதே பெரியார் காட்டிய பாதையில் மக்களும், அரசாங்கமும் சென்றிருந்தால்—30 கோடியாக இருந்த இந்திய மக்கள் தொகை 60 கோடியாகி விட்ட அவல நிலை, அபாயநிலை ஏற்பட்டிருக்காது அல்லவா?



இன்று இங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை நான் பெரிதும் ரசித்து அனுபவித்தேன்

கலைமூலம் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள், மக்கள் மனதில் பசுமரத்து ஆணிபோல ஆழமாகப் பதிந்துவிடும். பலர் மேடை ஏறிப் பேசிச்செய்ய முடியாத பிரச்சாரத்தை எல்லாம், ஒரே ஒரு நாடகத்தின் மூலம், ஒரே ஒரு நாட்டிய நிகழ்ச்சி மூலம் செய்து விட முடியும்.

மகா விஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்லுவார்கள். அந்தப் பத்து அவதாரங்களில் மக்களுக்கு எத்தனை அவதாரங்கள் தெரியும்? ராமனும், கிருஷ்ணனும் மக்களுக்கு நன்ருகத் தெரிவார்கள். பழங் காலத்திலிருந்தே ராமனைப் பற்றியும், கிருஷ்ணனைப் பற்றியும் நடனம் நாடகங்கள் நடத்தி நடத்தி, ஓகோ என்று விளம்பரம் கொடுத்ததினுல்தான், அந்த இரு அவதாரங்களும் மக்கள் மனதில் நன்ருய் பதிந்து விட்டிருக்கிருர்கள்.

ராமனும், கிருஷ்ணனும் தெரிந்த அளவுக்கு மச்ச அவதாரத்தைப் பற்றி மக்களுக்கு ஏதாவது தெரியுமா? கூர்ம அவதாரத்தைப் பற்றி அறிவார்களா? கலைத் துறையினர் எடுத்துக் கையாளாத, மெருகுதராத அவதாரங்கள் எல்லாம், எங்கோ மங்கி மறைந்து கிடக்கின்றன.

நமது பேரறிஞர் அண்ணு அவர்கள் கலைத்துறையின் வன்மையை, வலிமையை நன்குணர்ந்தவர் ஆவார். ஆகவேதான் சுயமரியாதைக் கருத்துக்களை, கழகத்தின் கொள்கைகளை, மக்களிடையே வேகமாகப் பரவச்செய்ய அவர்கள் உள்ளங்களிலே வேரூன்றி வளரச் செய்ய, நாடகக் கலையைக் கையாளத் தொடங்கினுர்.

பத்து மாநாடுகளால் செய்ய முடியாத சாதனையை அண்ணு அவர்களின் ஒரு 'சந்திரோதயம்' செய்தது. நூறு பேச்சாளர்கள் பேசிப் பேசி உண்டாக்க முடியாத தெளிவை, அவரது ஒரு 'சந்திரமோகன்' உண்டாக்கியது. இருபது முப்பது பட்டி மன்றங்கள் நடத்தினுலும் கிடைக்க முடியாத விளக்கங்களை எல்லாம், அவரது ஒரு 'நீதி தேவன் மயக்கம்' அளித்தது.

ஆகவே கலைத்துறையின் மூலம் செய்யப்படும் பிரச்சாரம், வேகமாகப் பரவக் கூடியது. நிச்சயமான, உறுதியான வெற்றியைத் தரக் கூடியது.

அந்த முறையில் குடும்ப நலத்துறையினர் சிறு குடும்ப நெறியைப் பற்றி மக்கள் சிந்திக்கவும், அதைப் பின்பற்றச் செய்யவும், கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருவதைக் காண, என் உள்ளம் பூரிப்படைகிறது.

புரட்சித் தலைவர் அண்ணன் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையில் நடக்கும் தமிழக அரசு, மற்ற மாநிலங்கள் எல்லாம் கண்டு பொருமைப்படும் விதத்தில், குடும்ப நலத் திட்டத்தை விறுவிறுப்போடும், வேகத்தோடும் செயல்படுத்தி, வெற்றிபெறச் செய்யும் என்பது உறுதி.

——

# குழந்தைகளைச் சான்றோர்களாக்க குடும்பநலம் தேவை!

## நடிகமணி டி.வி.நாராயணசாமி

[சென்னை வடபழனியிலுள்ள கங்கா நகர் காலனியில் 5—9—78 ஆம் நாள் மாலை நடைபெற்ற குடும்பநல இசை, நடன, நாடகக் கலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த, தமிழ் நாடு இயல், இசை, நாடகச் சங்கச் செயலாளர் நடிகமணி டி.வி. நாராயணசாமி அவர்கள் ஆற்றிய உரை.]

இந்தியப் பெருநாட்டில் இன்றையதினம் 60 கோடி மக்கள் இருக்கிருர்கள். இன்னும் சிலபல ஆண்டுகளில் 70 கோடி அல்லது 80 கோடி என்ற நிலையை எட்டும். எதிர்பாராத அளவுக்கு நாட்டில் மக்கள் தொகைப் பெருகி விட்டால் அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை உருவாக்க எந்த அளவுக்குத் திட்டமிட்டாலும் அதிலே தோல்வியைச் சந்திக்க நேரிடும். எனவே அரசாங்கம் ஒரு பக்கத்தில் மக்கள் நல்வாழ்வுக்காகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துகிற அதே நேரத்தில், மக்களுடைய ஒத்துழைப்பும் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான், நம்மை நாமே கட்டுப் படுத்திக் கொள்ளக் கூடிய அத்தகைய உளப்பாங்கைப் பெற்று, மனமாற்றத்தைப் பெற்று குடும்ப நலத் திட்டத்தில் நாட்டமுடையவர்களாக இருக்க வேண்டும்.

'குழல் இனிது யாழ் இனிது என்பர்—தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதார்'

என்று வள்ளுவர் கூறினுர். மக்களுடைய மழலைச் சொல்லுக்குச் சமமானது உலகத்தில் வேறு எதுவும் இல்லை. அதை அறியாதவர்கள்தான் குழல் இனிமையாக இருக்கிறது; யாழ் இனிமையாக இருக்கிறது என்று சொல்வார்கள் எனக் கூறினுர். மழலை இன்பம் ஒவ்வொருவருக்கும் வேண்டியதுதான். குழந்தை வேண்டாமென்று குடும்ப நலத் துறையினர் சொல்லவில்லை. ஆனுல் அதே நேரத்தில்,



'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய்'

என்பதையும் நான் மறந்து விடக் கூடாது. வறுமையின் பிடியிலே இருந்து கொண்டு ஏராளமான குழந்தைகளைப் பெறுவோமானுல் சான்ருேர்களாக மக்களை உருவாக்க முடியாது. அவர்களுக்குத் தேவையான நல்லுணவை கொடுப்பதற்கும்—கல்வி அளிப்பதற்கும் அந்தப் பெற்ருேர்கள் எந்த அளவு கஷ்டப்பட நேரிடும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க கடமைபட்டிருக்கின்ருேம். குழந்தைகள் குறைவாக இருந்தால்தான் 'தன் மகனைச் சான்ருேன்' என கேட்கும் வாய்ப்பைத் தாய்மார்கள் பெற முடியும். அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே குடும்பநலத் திட்டம் குழந்தைகள் வேண்டாம் என்று சொல்லவில்லை, மழலை இன்பத்திற்கு ஈடாக வேறு எதுவும் இல்லை. அதற்காக அதுவே வேலை என்று இருந்து விடக் கூடாது.

நாட்டிலே ஏராளமாக வறுமை இருக்கிறது. வறுமைப் பிடியிலே சிக்கிக் கிடக்கின்ற இந்தியப் பெருநாட்டிலே எத்தனைத் திட்டங்கள் போட்டாலும், அதையெல்லாம் பயனற்றதாக்கிவிடக்கூடிய அளவுக்கு மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட அனுமதித்தால், எதிர்பார்க்கும் பலனை நாட்டிலே காண முடியாது போகும். எதிர்காலமும் மிகமிகப் பயங்கரமானதாக அமையும். மக்கள் தொகைப் பெருகப் பெருக எதிர்காலம் கேள்விக் குறியாக நிற்கும். ஆகவே ஒரு அமைதியற்ற சூழ்நிலையிலே இந்தச் சமுதாயம் தத்தளிக்க நேரிடும். ஆகவேதான் அறிஞர்கள், பொருளாதார விற்பன்னர் சான்ருேர்கள் அனைவரும் கண்டமுடிவுதான் குடும்பநலம். எனவே இந்த நாட்டு மக்கள்சிந்தித்து அளவான குடும்பம் அமைத்து வளமாக வாழ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ——

# தமிழ்நாட்டில் மலேரியாவும் காலராவும் குறைந்துள்ளன!

## நல்வாழ்வுத் துறை இயக்குநர் டாக்டர் வி. கபாலி தகவல்

மலேரியாவும், காலராவும் தமிழ் நாட்டில் குறைந்து வருவதோடு கட்டுக்குள்ளும் இருந்து வருகிறது. மிகக் கடுமையான இந்நோய்கள் ஏற்படும் எனக் கருதப்பட்ட பகுதிகளில் நல்வாழ்வுத்துறை எடுத்த நடவடிக்கைகள் காரணமாக மலேரியா நோய் குறைந்துள்ளது.

கடந்த 1977-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்டு முதல் நாள் வரை மலேரியா நோயால் பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை 83,000! ஆனுல் நடப்பு ஆண்டில், அதே கால கட்டத்தில் மலேரியா நோய்க்கு உள்ளானேரின் எண்ணிக்கை 35,000 தான்! இந்த ஆண்டில் இன்னமுள்ள மூன்று மாதங்களில் இன்னும் 20,000 பேர்கள் மலேரியா நோயால் பாதிக்கப் படக்கூடும் என்ருலும், கடந்த 1977-ஆம் ஆண்டை விட இது மிகக் குறைவானதாகவே இருக்கும் என்று நல்வாழ்வுத்துறை இயக்குநர் டாக்டர் வி. கபாலி கூறினுர்.

அதே போல் 1977-ஆம் ஆண்டு 2276 பேர்கள் காலரா நோயால் பாதிக்கப்பட்டனர் என்றும், ஆனுல் இந்த ஆண்டு இதுவரை 650 பேர்களே காலரா நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கிராமப் புறங்களில், குறிப்பாக மலேரியா அதிகமுள்ள பகுதிகளில் மருந்து தெளிப்பதற்கு நல்வாழ்வுத் துறை ஏற்பாடு செய்து, பணி நடந்து வருவதாகக் கூறிய அவர் மலேரியா நோய்க்குள்ளானேரில் மூன்றில் ஒரு பகுதியினர் சென்னை நகரத்தைச் சார்ந்தோர் என்றும், கிராமங்களுடன் ஒப்பு நோக்கும்போது மாநகரங்களிலும், நகரங்களிலுமே மற்ற மாநிலங்களில் மலேரியா அதிகமாகக் காணப்படுகிறது என்றும் சொன்னுர்.

காய்ச்சலுக்குரிய சிகிச்சை அளிப்பதற்காக நிலையங்கள், இந்நோய் அதிகமாகவுள்ளது எனக் கருதப்படும் இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இரத்தப் பரிசோதனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினுர். மேலும் பரிசோதனைக்காக இரத்தம் சேகரிக்கும் பணியில் தொண்டர்களும் ஈடுபட்டுள்ளனர் எனவும், இப்படிப்பட்ட பணிகளால் விழிப்புணர்வோடு துறை செயலாற்றி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

——

சென்னை ஆமில்டன் பாலம் அருகேயுள்ள குடிசைப் பகுதியில் நடைபெற்ற குடும்பநல இசை, நடன, நாடக நிகழ்ச்சியில், செயலாளர் திரு. பி. முராரி அவர்கள் உரை நிகழ்த்துகிருர்.



# தமிழ் நாட்டில் மருத்துவ வசதிகளை விரிவு படுத்த ரூ.250 கோடித் திட்டம்!

## அமைச்சர் திரு. திருச்சி சௌந்திரராசன் அறிவிப்பு

தமிழ் நாட்டில், குறிப்பாகக் கிராமப் புறங்களில் உலக வங்கியின் உதவியோடு மருத்துவ வசதிகளை விரிவு படுத்துவதற்கான இருநூற்று ஐம்பது கோடி ரூபாய்த் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் இருந்து வருவதாக நல் வாழ்வுத் துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள், திருச்சியில் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

அரசு மருந்தகங்கள், தாலுகா அல்லாத மருத்துவமனைகள், தாலுகா மாவட்ட மருத்துவ மனைகள், ஆகியவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவ வசதிகளை அதிகப் படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பல் மருத்துவம், கண், காது, தொண்டை ஆகியவற்றிற்கான மருத்துவம், எலும்பு முறிவு சிகிச்சைக்கான நிலையங்கள், இரத்த வங்கிகள் போன்ற கூடுதல் வசதிகள் ஏற்படுத்திதரப்படும்.

எல்லா மட்டத்திலுள்ள மருத்துவ மனைகளுக்கும் நவீன மருத்துவ கருவிகள் வழங்கப்படும். அனைத்து மருத்துவ மனைகளிலும் உள்ள அறுவைச் சிகிச்சை அரங்குகள் 'குளிர் பதன' அறைகளாக ஆக்கப்படும்.

இத்திட்டம் செயல் படுத்தப்படும் போது மருத்துவர்களுக்கான வேலை வாய்ப்பு அதிகரிக்கும் எனக்கூறிய அமைச்சர், தமிழ் நாட்டின் அடுத்த 15 ஆண்டு நல்வாழ்வு, மருத்துவத் தேவைகளை இத்திட்டத்தின் மூலம் நிறைவு செய்து வைப்பதற்குரிய கவனம் செலுத்தப்படும் என்றார்.

மேலும் கிராமப் புற நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றவே அரசு முந்துரிமை அளிக்கும் எனக் கூறிய நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள், ஒவ்வொன்றிலும் இரண்டு நடமாடும் மருத்துவ நிலையங்கள் வீதம் 24 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவ நிலையங்கள் இத் திட்டத்தின் கீழ் முதன் முதலாகத் தொடங்கப் பட்டுள்ளது என்றார். இந்த 24 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருபத்திநான்கு ஊராட்சி ஒன்றியங்களில் செயல் பட்டு வருகின்றன. இத்திட்டம் நல்ல பலனை ஏற்படுத்தி வருகிறது. நடப்பு ஆண்டுக்குள் இன்னும் நூறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு நடமாடும் மருத்துவ நிலையங்கள் அமைக்கும் திட்டம் விரிவு படுத்தப்படும்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் தமிழ் நாட்டிலுள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடமாடும் மருத்துவ நிலையங்களை அமைக்க வேண்டுமென்பது தங்கள் திட்டம் என்று அவர் கூறினார்.



சென்னை மத்திய சிறையில் நடைபெற்ற குடும்பநல இசை, நடன, நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. நாராயணசாமி அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.

## கருவுற்றிருப்பதைக் கண்டறிய புதிய முறை!

பெண் ஒருவர் கருவுற்றிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமா? கருவுற்ற ஆரம்ப கட்டத்திலேயே இரண்டு மணி நேரத்தில் கண்டு பிடித்து விடலாம். நவீன மருத்துவ விஞ்ஞானத்தின் நன்றிக்குரிய வளர்ச்சி அத்தகையது.

ஒரு அனைத்துலக மருந்து நிறுவனம் நாட்டில் முதன் முதலாக இம்முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது. எளிதாகவும் விரைவாகவும் பயன்படுத்தத் தக்க வசதியான கண்ணாடிச் சிமிழ் ampoule ஒன்றின் மூலம் வீட்டு விலக்கு நின்ற எட்டாவது நாளே இதைக் கண்டு பிடிக்கலாம்.

அந்தக் கண்ணாடிச் சிமிழுக்குள் கருவுற்றதாகக் கருதப்படும் பெண்ணின் வடிகட்டிய 0·14 மில்லி நீரை விடவேண்டும். சுத்தப் படுத்தப்பட்ட (Distilled Water) 0·4 மில்லியைச் சேர்க்க வேண்டும். கண்ணாடிச் சிமிழின் அடியில் இரண்டு மணி நேரத்தில் சக்கர வடிவம் உருவானால் அந்தப் பெண் கருவுற்றிருப்பதாகப் பொருள்.

எழும்பூர் தாய்-சேய் நல மருத்துவ மனையிலும், திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையிலும் இந்த மருந்தினைப் பயன் படுத்தியதாகவும், அது நல்ல பலனைத் தருவதாகவும் எழும்பூர் தாய்-சேய் நல மருத்துவ மனையைச் சார்ந்த டாக்டர் வி. சி. பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்.



# மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஈடு தரும் நடவடிக்கை

## ஹாங்காங் அருகே புதிய நகரங்கள் உதயம்

ஹாங்காங்கின் மக்கள் தொகைப் பெருக்கம் கி. பி. 2030-ல் 6·5 மில்லியனாக உயரும் என உதவி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விவர ஆணையாளர் திரு. பெஞ்சமின் மோக் அறிவித்துள்ளார். கி. பி. 2030-ல் இறப்பு விகிதத்திற்குச் சமமாகப் பிறப்பு விகிதம் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இப்போது பிறப்பவர்களின் எண்ணிக்கை 80,000 ஆகவும், இறப்பவர்களின் எண்ணிக்கை 23,000 ஆகவும் உள்ளது. எனவே ஆண்டுதோறும் 57,000 பேர்கள் மக்கள் தொகையில் கூடி வருகிறார்கள்.

ஹாங்காங்கின் ஆசியா இதழ் (Hongkong's Asia Magazine) தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. 1946-ஆம் ஆண்டில் இக்காலனியின் மக்கள் தொகை 6,00,000. கடந்த ஆண்டு வெள்ளம் காரணமாகச் சீனவிலிருந்து மக்கள் இங்கே வந்து குடியேறினார்கள். அதன் காரணமாக மக்கள்தொகை 4·7 மில்லியனாக உயர்ந்தது. கி. பி. 2000-ல் இது 6 மில்லியனாக உயரும் என அத் தகவல் கூறுகிறது.

404 சதுர மைல் பரப்பு உள்ள இப் பகுதி, மலைகளும் குன்றுகளும் நிறைந்த பகுதியாகும். இப்போதுள்ள 5 மில்லியன் மக்களும் இப்பகுதியின் பத்தில் ஒரு பங்கு நிலத்தில் நெருக்கி அடித்து வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

குடும்பநலத் திட்டப் பணியாளர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய போதிலும் கோலூன் போன்ற நகர்ப்புற பகுதிகளில் மக்கள் தொகை நெருக்கம் மிக அதிகமாகவுள்ளது. இது, ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை அங்குள்ளவர்களுக்கு ஏற்படுத்தி இருக்கிறது. எனவே ஹாங்காங்கின் வெளிப் புறத்தில் மூன்று புதிய நகரங்களை இரண்டு மில்லியன் டாலர் செலவில் உருவாக்குவது என்ற திட்டத்தை 1972-ல் அரசு அறிவித்தது. இதன் மூலம் 1980 மத்தியில் 1·8 மில்லியன் மக்களுக்கு வீட்டு வசதியும், வேலை வாய்ப்பும் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான வேலை 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப் பட்டது.

சீனப் பெயர்களைக் கொண்ட புதிய நகரங்களில் சுமார் 38,000 பேர்கள் குடியேறிவிட்டார்கள். 'ஷா டின்' என்ற இடத்தில் 30,000 பேர்களாக இருந்த மீனவர்கள், விவசாயிகள் மக்கள் தொகை 1981-ல் 2,30,000 ஆகவும், 1986-ல் 5,30,000 ஆகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெருக்கடி மிக்க நகர்ப்பகுதியான 'கோலூனிலிருந்து அடுத்த ஐந்தாண்டுகளில் 1·5 மில்லியன் மக்கள் புதிய நகரங்களில் குடியேறுவார்கள் என எதிர்நோக்கப் படுகிறது!

## காசநோய்த் தடுப்புக்கு இந்திய அரசின் உதவி

ஆறாவது திட்டகாலத்தில், காச நோய் கட்டுப்பாடுத் திட்டம் முழுக்க முழுக்க இந்திய அரசின் நூறு சதவிகித நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும். மாவட்ட காசநோய்த் தடுப்பு நிலையங்களை அமைப்பது, காசநோயாளிகளுக்கான படுக்கை வசதிகளை அதிகப் படுத்துதல், பி. சி. ஜி. மருந்து வழங்குதல் ஆகியவை இந்திய அரசால் செயல் படுத்தப்படும்.

காசநோய்த் தடுப்புப் பணிகளை பல்வேறு முனைகளிலும் முனைப்பாக ஆற்றிட அரசு நடவடிக்கை எடுக்க விரும்புகிறது. எல்லாவித நல் வாழ்வுப் பணிகளுடனும் சேர்த்து பி. சி. ஜி. ஊசி மருந்து போடுவது இணைத்துச் செயல் படுத்தப்படும். கிராம அளவில் காச நோயாளிகளைக் கண்டுபிடித்து, சிகிச்சை அளிக்கப் பல நோக்குப் பணியாளர்கள் பயன் படுத்தப்படுவர்.

நிபுணர்களின் கருத்துப்படி, இந்திய மக்கள் தொகையில் 40 முதல் 50 சதவிகித மக்கள் காச நோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது. எக்ஸ்ரேயின் மூலம் கடுமையாகக் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியப் பட்டவர்கள் மட்டும் இந்தியாவில் எண்பது லட்சம் முதல் தொண்ணூறு லட்சம் பேர் உள்ளனர். 2.5 மில்லியன் பேர்களுக்கு இருப்பது தொத்தும் தன்மை உடையது. காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனரா என இது வரை இந்தியாவில் 25 கோடி பேர் பரிசோதிக்கப் பட்டனர். 23 கோடிப் பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசிபோடப் பட்டுள்ளது.

## குற்றாலத்தில் மாவட்ட அலுவலர் மாநாடு

தமிழ் நாடு அரசின் மாவட்ட மருத்துவ, குடும்பநல, நல்வாழ்வு அலுவலர்களின் மாநாடு ஆகஸ்டு திங்கள் 24, 25, 26 தேதிகளில் குற்றாலத்தில் நடை பெற்றது.

ஆகஸ்ட் 24-ஆம் நாள் தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு - குடும்பநலத் துறையின் ஆணையரும் செயலாளருமான திரு. பி. முராரி அவர்கள் துவக்கி வைத்தார். இம்மாநாட்டின் நிறைவு விழாவில் ஆகஸ்டு 26-ஆம் நாள் மாண்புமிகு நல்வாழ்வு-குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள் கலந்து கொண்டு நிறைவு விழாச் சொற்பொழிவாற்றினார்.

எதிர்காலத்தில் மருத்துவ, குடும்ப நல, நல்வாழ்வுப் பணிகள் ஆற்றுவது எப்படி என்பது பற்றி குழு விவாதங்களுக்குப் பின் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பல் மருத்துவப் பிரிவின் வெள்ளி விழாவில், பல் மருத்துவ மாணவர் லிம்போ நடனம் ஆடுகிறார்.



# நிலவழி நடப்பு

## கி. பி. 2000-ல் பிலிப்பைன் திணறப் போகிறது!

குடும்பநலத் திட்டம் குடும்ப நல் வாழ்வு அனைத்தையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டமாக்கப் பட்டுள்ளது பிலிப்பைனில்.

இப்போது 45 மில்லியனாக இருக்கும் பிலிப்பைனின் மக்கள் தொகை கி. பி. 2000-ல் 64 மில்லியன் முதல் 84 மில்லியன் வரை உயரக்கூடும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

நல்வாழ்வு, மருத்துவம் குறித்த அனைத்தும் ஒருங்கிணைந்த பணிகளாற்றும் படி செய்யப்படும். பணியாளர்களுக்குத் தக்க பயிற்சியளிக்கப் படும். 1975-ஆம் ஆண்டில் பள்ளி செல்லும் வயதடையா பருவத்தினரில் 30.6 சதவிகிதத்தினர் சத்துணவுக் குறைபாட்டால் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தனர்.

## கிளை நிலையங்கள்!

தமிழ் நாட்டுக் கிராமப் புறங்களில் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 286 லட்ச மக்கள் வாழ்ந்து வருவதாக அறிகிறோம். பத்தாயிரம் மக்களுக்கு ஒரு கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்பது விதி! எனவே 2860 கிளை நிலையங்கள் (Sub-Centres) தமிழ் நாட்டில் அமைக்கப்பட வேண்டும்.

ஆனுல் தமிழ் நாட்டுக் கிராமப் புறங்களில் இதுவரை 2880 தாய்-சேய் நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செவ்வனே இயங்கி வருகின்றன !



## தாலுக்கா மருத்துவ மனைகளின் தரம் உயர்த்தப்படுகிறது!

தமிழ் நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நான்கில் ஒன்றை, மருத்துவமனை அளவுக்கு உயர்த்துவது என்ற ஒருதிட்டம் கூறப் பட்டு, அப்படி 95 ஆரம்ப சுகாதார நிலையங்களை உயர்த்துவது என, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. பின் திட்டக்குழு விதிகளைத் தளர்த்தி, தாலுக்கா மருத்துவ மனைகளின் வசதிகளை—படுக்கைகளைக் கூடுதலாக்க இசைவு தந்தது. ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சுற்றியுள்ள தாலுக்கா மருத்துவ மனைகளுக்கு ஆவன செய்ய முடிவு செய்து, அரசு 14 தாலுக்கா மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளைச் கூடுதலாக்குவது, சிறப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்றவற்றைப் படிப்படியாகச் செய்து வருகிறது.

எக்ஸ்ரே எடுக்கும் வசதி, பல் மருத்துவத்திற்கான வசதிகளெல்லாம் தாலுக்கா மருத்துவமனைகளிலேயே கிட்டி வருகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## பல நோக்கு நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு பயிற்சி!

பல நோக்கு நல் வாழ்வுப் பணியாளர் திட்டத்தை (The Multi-Purpose Workers Scheme) கன்னியாகுமரி, மதுரை, செங்கல்பட்டு, சேலம், தென் ஆர்க்காடு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல் படுத்தத் தமிழ் நாடு அரசு உத்திர விட்டது. முதல் கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்ட இத்திட்டம் 1977-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டுக்குள் எல்லா மாவட்டங்களுக்கும் இத் திட்டத்தை விரிவு படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் நல்வாழ்வுப் பணியாளர்களுக்குச் சென்னை, சேலம், காந்திகிராமம் ஆகிய இடங்களில் உள்ள நல்வாழ்வு-குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை ஆரம்ப சுகாதார நிலையங்களை சார்ந்த 406 மருத்துவர்களுக்கும், 264 வட்டார விரிவாக்கக் கல்வி அலுவலர்களுக்கும், நல்வாழ்வு உதவியாளர்களில் ஆண்கள் 156 பேர்களுக்கும், பெண்கள் 235 பேர்களுக்கும்,நல்வாழ்வு ஊழியர்களில் ஆண்கள் 747 பேர்களுக்கும், பெண்கள் 704 பேர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்!

வட்டார வளர்ச்சிப் பகுதி ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற இலக்கைத் தமிழ் நாடு எட்டி விட்டது. மேலும், 9 வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது! இந்த வகையில் தமிழ் நாட்டிலுள்ள 374 வட்டார வளர்ச்சிப் பகுதிகள், 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன!

## சிறு நல்வாழ்வு நிலையங்கள்!

தமிழகத்தில் சிறு நல்வாழ்வு நிலையங்கள் (Mini Health Centres) அமைக்க அரசு ஆக்கம் அளித்து வருகிறது! கிராமப் புற மக்களுக்கு சிறு அளவில், கூட்டுறவு அடிப் படையில் நல்வாழ்வு, மருத்துவ வசதிகளைக் கிட்டச் செய்ய 'சிறு நல்வாழ்வு நிலையங்கள்' அமைப்பதை அனுமதித்து ஊக்கப் படுத்தி வருகிறது! இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, தன்னியக்க நிறுவனம் ஆகியவை 1:1:1 என செலவை ஏற்கின்றனர்.

5000 மக்கள் தொகைக்கு ஒரு சிறு நல்வாழ்வு நிலையம் என்ற அடிப்படையில் 1977-78-ஆம் ஆண்டில் 54 சிறு நல்வாழ்வு நிலையங்களை அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

ஆண்டு ஒன்றிற்கு ரூ. 18,000/- ஒரு சிறு நல்வாழ்வு நிலையத்திற்குத் தொடர் இனச் செலவாக ஏற்படும் ! இந்திய அரசு தர வேண்டிய மூன்றில் ஒரு பகுதி நிதி உதவி கிட்டுவதற்கு முன்பே மொத்தச் செலவில் 50 சதவிகிதமான ரூ. 4·86 லட்சத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.

1978-79-ல் மேலும் 50 சிறு நல் வாழ்வு நிலையங்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது! அதற்கென ரூ. 4·50 லட்சம் ஒதுக்கியுள்ளது! இந்த 104 சிறு நல்வாழ்வு நிலையங்களை நடத்துவதற்கு இந்திய அரசு தரவேண்டிய நிதி உதவியைத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

## தமிழ் நாட்டில் இயங்கும் மருத்துவக் குழுக்கள்!

தமிழ் நாட்டில், 1977—78-ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கும் மருத்துவக் குழுக்களை (Mobile Medical Teams) ரூ. 7.16 லட்சம் செலவில் ஏற்படுத்தியுள்ளனர். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்று மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள்! இத்திட்டத்தின் வாயிலாகக் குக்கிராம மக்கள் எல்லாம் நவீன மருத்துவ வசதிகளை அவர்கள் கிராமங்களிலேயே பெற்று வருகின்றனர்.

1978-79-ஆம் ஆண்டில் இன்னும் நூறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கும் மருத்துவக் குழுக்களை அரசு அமைக்க விருக்கிறது. இதற்காக 100 மருத்துவர்கள், 200 மருந்தாளர்கள் (Pharmacists) ஆகியவர்களை நியமிக்க அரசு உத்திர விட்டுள்ளது. 50 வாகனங்களை வாங்கவும், அதற்கென 50 ஓட்டுனர்களை (Drivers) நியமிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மொத்தம் 124 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 94.35 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக முழு நிதி உதவி அளிக்க வேண்டுமென இந்திய அரசை கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் 153 மருத்துவர்களை, மூன்றுவது மருத்துவர்களாக நியமிக்கவும், 1979-80-ஆம் ஆண்டில் 125 இயங்கும் மருத்துவக் குழுக்களை, நியமிக்கவும், 1980-81-ல் 134 இயங்கும் மருத்துவக் குழுக்களை நியமிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

1978 முதல் 1881-க்குள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத் திட்டம் அறிமுகப் படுத்தப் பட்டு விடும்.

## நகர்ப்புறக் குடும்ப நல நிலையங்கள்

குடும்பநலத் திட்டத்தைச் செயல் படுத்த நகர்ப்புறங்களிலும், 207 நகர்ப்புற குடும்பநல நிலையங்கள், இந்திய அரசின் நூறு சதவிகித நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இவற்றில் 16 தன்னியக்க நிறுவனங்களின் கீழும், 57 தலத் தாபனத் துறையின் கீழும் செயல்பட்டு வருகின்றன. அரசு தாலுகா மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு 134 நகர்ப்புறக் குடும்பநல நிலையங்கள் இயங்கி வருகின்றன.

நகர்ப்புற மக்களிடையே குடும்ப நலத்திட்டத்தைப் பரப்பவும், சிறப்பாக நகர்ப்புறங்களில் உள்ள குடிசை வாழ் மக்கள், எழை எளிய மக்கள் ஆகியோரிடையே திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி ஏற்கச்செய்யவும் இந்நிலையங்கள் பணியாற்றி வருகின்றன! குடும்பநல முறைகளை மேற்கொள்வதற்கான, ஆலோசனைகளும், கருத்தடைச் சாதனங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன?

## பேறு காலத்திற்குப் பின் குடும்பநலம் பேணும் திட்டம்!

பேறுகாலத்திற்குப் பின் குடும்ப நலம் பேணும் திட்டம் (Post-Partum Programme), தமிழ்நாட்டில் 24 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந் நிலையங்களின் தொண்டால் 1977—78ல் 1,41,767 தாய்மார்கள்பயனடைந்துள்ளார்கள். மொத்தத்தில் 62,588 தாய்மார்கள் குடும்பநலத் திட்டமுறைகளை ஏற்றுச் செயல் படுத்துமளவுக்கு ஊக்குவிக்கப் பட்டுள்ளார்கள். 48,290 பேர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள். மொத்தத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களில் இது 77.7 சதவிகிதமாகும்.

புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும், காந்தி கிராமம் கிராமப்புறக் குடும்பநல நிலையத்திலும் இத்திட்டத்தை 1977—78 ல் (Phase V) செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள தன்னியக்க நிறுவனங்களிலும் (Private Medical Institutions approved in Phase VI—78-79) இத்திட்டத்தைத் துவக்கத் தமிழ்நாடு அரசு கருதியுள்ளது. இது தொடர்பாக இந்திய அரசுடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

கடந்த ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்களில் சென்னை குடிசைப் பகுதிகளில் நடைபெற்ற குடும்பநல, இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளில் ஒரு காட்சி.



159880

## பரம்பரை மருத்துவச்சியர்க்கான பயிற்சி!

கிராமப் புறங்களில், பரம்பரையாக உள்ள மருத்துவச்சிகள் (Dais) தான் இன்னும் பேறுகாலம் பார்த்து வருகின்றனர்! சுற்றுப்புறச் சுகாதாரத்துடன், தூய்மை காத்துப் பேறுகாலம் பார்க்கப் பயிற்சியளிக்கப்படுகிறது! பேறுகாலத்திற்குப்பின் அந்த மக்களிடையே குடும்ப நலத்திட்டக் கருத்துக்களைப் பரப்ப சிறப்பாகத் தாய்மார்களிடையே சிறுகுடும்ப நெறியின் உண்மைகளை விளக்க இவர்களது செல்வாக்கையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!

ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்த மருத்துவச்சியர்க்கு ஒருமாத காலம் பயிற்சியளிக்கப்படுகிறது! பயிற்சிக் காலத்தில், ஒவ்வொரு நாளும் பயிற்சி பெறும் மருத்துவச்சி ஒவ்வொருவருக்கும் ரூ. 10/- உதவிப் பணம் வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் இவர்கள் குடும்பநலத்திட்ட ஊக்குவிப்பாளர்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்! சட்டத்திற்குட்பட்டு ஊக்குவிப்புப் பணமும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

1975—76-ல் 95 பேர்களும், 1976—77-ல் 174 பேர்களும், 1977—78-ல் 1869 பேர்களும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்!

1978—79 ஆம் ஆண்டில் 3000 மருத்துவச்சியருக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. மாவட்ட அலுவலர்களுக்குத் தெரிவித்து, இலக்கினை எட்ட எல்லாமுயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன!

## குடும்பநல தாய்-சேய் நலத் திட்டத்தில் முன்னேற்றம்!

தமிழ் நாடு அரசு குடும்பநலத் திட்டத்தைத் தொடர்ந்து இந்திய அரசு உதவியுடன் செயல்படுத்தி வருகிறது! நடப்பு ஆண்டில் ஆகஸ்டு திங்கள் வரை, 2770 தந்தைமார்களும் 34,352 தாய்மார்களும் குடும்பநலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். 9303 தாய்மார்கள் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டுள்ளார்கள்! 66,922 பேர்கள் மற்ற மற்ற முறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். 2922 தாய்மார்கள் கருத்தடை மாத்திரைகளை அருந்தி வருகிறார்கள்.

8,876 தாய்மார்கள் கருச் சிதைவு செய்து கொண்டுள்ளனர்.

தாய்-சேய் நலத் திட்டத்தின்கீழ் 60,496 குழந்தைகளுக்கு (D.P.T. Primary) முதல் முறையாகவும், 22,508 குழந்தைகளுக்கு (D.P.T. Booster) அதிக அளவிலும் கக்குவான் தடுப்பு மருந்துகொடுக்கப்பட்டுள்ளது.

96,208 குழந்தைகளுக்குத் தொண்டை அடைப்பான் வராமலிருப்பதற்கான தடுப்பு மருந்து (D.T.) தரப்பட்டுள்ளது. இசிவு நோய் வராமல் காப்பதற்குரிய தடுப்பு மருந்து (T.T.) 32,863 குழந்தைகளுக்குத் தரப்பட்டுள்ளது.

சத்துணவுக் குறைவால் இரத்த சோகை நோய் வராமல் காக்க 1,28,819 தாய்மார்களுக்கும், 1,29,179 குழந்தைகளுக்கும் மருந்து அளிக்கப்பட்டுள்ளது.

மாலைக் கண்நோய் வராமல் காக்க 5,099,440 குழந்தைகளுக்கு வைட்டமின்-ஏ மருந்து கொடுக்கப் பட்டுள்ளது.

## இருவார விழா!

தேசியக் குடும்ப நலத் திட்ட இருவார விழா நடத்துமாறு இந்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. அக்டோபர் 16-ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் வரை இரு வார விழா நடத்துமாறு இந்திய அரசு நெறிவித்துள்ளது.

தமிழகம் வழக்கம் போல் தேசியக் குடும்ப நலத்திட்ட இருவார விழாவினைச் சிறப்பாக நடத்த விருக்கிறது. மத்திய, மாநில அரசுகளைச் சார்ந்த அனைத்து விளம்பரப் பிரிவுகளின் ஒத்துழைப்போடு முனைப்பான விளம்பரப் பணிகள் ஆற்றப்படும். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்கும் தேசிய இயக்கமாக இப்பணிகள் மூலம் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இருவார விழாவின் போது, மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாடு எதிர் நோக்க வேண்டியுள்ள ஆபத்தான பிரச்சினைகள் எவை எவை. ஒவ்வொரு குடும்பத்தின் எதிர் காலமும், குழந்தைகளின் எதிர் காலமும் எப்படி பாதிக்கப் படுகிறது என்பதெல்லாம் மக்களுக்கு இருவார விழாவின் போது விளக்கப்படும். குடும்பநல முறைகளைப் பின்பற்றுவோரின் தொகையை அதிகரிக்கச் செய்யவும், தாய்-சேய் நலத்திற்கென அரசு செய்து தந்துள்ள வசதிகளை மக்கள் பெருமளவு பயன்படுத்திக் கொள்ளவும் இருவார விழாவின் போது ஆவன செய்யப்படும். வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதற்காகவே ஒருங்கிணைந்தத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது என்ற உண்மையை மக்கள் அறியுமாறு செய்யப்படும்.

இருவார விழாவைச் சிறப்புற வெற்றிபெறச் செய்வதற்காக வளர்ச்சிப் பணிகள் ஆற்றும் அனைத்துத் துறைகளும் பங்கேற்கச் செய்யப்படும். தன்னியக்க நிறுவனங்கள் ஒத்துழைப்புக் கோரப்படுவதுடன், இருவார விழாவில் அவையும் பங்கேற்கும்படி வேண்டப்படும். புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும். சிறுகுடும்ப நெறியின் அவசியத்தை மக்கள் புரிந்து கொள்ளத்தக்க வகையில் ஊர்வலங்கள் நடத்தப்படும்.

மாநிலப் பரிசுச் சீட்டு நிறுவனத்தின் துணையுடன் இயன்ற இடங்களில் குடும்பநலப் பரிசுச் சீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகியவற்றில் தாய் நல நாள், குழந்தை நல நாள் நடத்தப்பட்டு அவர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்படும். ஆசிரியர்கள், மாணவர்களுக்கென கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கலாம் எனவும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இருவார விழாவின்போது இது போன்ற பல்வேறு பணிகள் தமிழகம் முழுவதிலும் ஆற்றப்படும்.

குடும்பநல இருவார விழாவின் மூலம் மக்களிடையே சிறு குடும்ப நெறி ஓங்கச் செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.



# ஈரோட்டுப் பெருவிழா! தமிழ் நாட்டுத் திருவிழா!!

1798-ஆம் ஆண்டு மால்தூஸ் என்ற பொருளாதாரப் பேரறிஞன் 'மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தியாக வேண்டும்' என அறிவித்தார்! ஏன், அதற்குமுன்னே கூட இந்த எண்ண ஓட்டம் உலகத்தில் நிலவி இருந்திருக்கிறது! 4000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தில் எழுதப்பட்ட 'பாப்ரசில்' இந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன! 2000 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கத் தத்துவ ஞானிகளிடையே உயிரோட்டமுள்ள விவாதப் பொருளாக கருத்தடைத்திட்டம் இருந்திருக்கிறது.

1600 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலும், 1300 ஆண்டுகளுக்கு முன்பு சீனத்திலும் இந்தக் கருத்துக்கள் பேசப் பட்டிருக்கின்றன. என்றாலும் பொருளாதார அடிப்படையில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தியாக வேண்டும் எனக் கூறியது மால்தூஸ்தான்! ஆனால் அவருக்குப் பின்னாலே உலகம் முழுவதும் சிறு குடும்ப நெறியைப் பரப்பியவர்கள் மேரிஸ்டோப்ஸ், மார்கரட்சாங்கர் என்ற இரு பெண் மணிகளாவர்!

மத அடிப்படையிலும், மற்ற மற்ற காரண காரியங்களாலும் மகத்தான உலக எதிர்ப்பைப் பெற்ற அந்தப் பெண்களின் கருத்துக்களுக்கு, இந்தியாவின் ஒரு மூலையில்—தமிழகத்தில் ஆதரவுக் குரல் கிட்டியது. அதுதான் தந்தை பெரியார் அவர்களின் குரல்!

இந்தியாவிலேயே குடும்ப நலத் திட்டத்திற்கு ஆதரவாக முதல் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்களாவார்! அரிஸ்டாட்டிலைப் போல அளவான குடும்பம் அவசியம் என்றவர் தந்தை பெரியார்! கரடு முரடாகக் கிடந்த தமிழ்ச் சமுதாயம் என்ற காட்டைக் கழனியாக்கியவர் தந்தை பெரியார் அவர்கள்! சாதி, சம்பிரதாயங்கள் என்ற சதுப்பு நிலமாக இருந்த தமிழகத்தைப் பண்படுத்தியவர் தந்தை பெரியார் அவர்கள்! அளவில்லாமல் பிள்ளைகளைப் பெருதீர்கள் என அச்சமின்றி இன்று எழுத முடிகிறது—பேச முடிகிறது என்றால், அதற்கும் தந்தை பெரியார் அவர்கள் தான் காரணம்!

அத்தகைய தந்தை பெரியார் அவர்களுக்கான நூற்றாண்டு விழா ஈரோட்டில் பெருவிழாவாக எடுக்கப் பட்டது! தமிழக அரசு எடுத்த அந்த விழா தமிழ் நாட்டுத் திருவிழாவாக அமைந்தது.

செப்டம்பர் 17, 18 தேதிகளில் ஈரோடு, மாமேரு போல் உயர்ந்து நின்று காட்சி தந்தது! தமிழகமே அங்கு கூடியது எனலாம்! ஈரோடு நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது! தெரு வெல்லாம் தோரணங்கள்! வளைவுகள்! வகை வகையான—வண்ண வண்ண அலங்காரங்கள்! திரும்பிய திசைகளெல்லாம் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படங்கள்! எங்கு நோக்கினும் எதை நோக்கினாலும் ஈரோட்டுப் புரட்சிப் புயல் என வர்ணிக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்கள் காட்சி தந்தார்! தமிழக அரசு ஈரோட்டில் ஏற்படுத்தியுள்ள 'அய்யா-அண்ணா' நினைவகம் தனிப்பொலிவோடு விளங்கியது!

1924-லேயே 'கர்ப்ப ஆட்சி' என்ற புத்தகத்தை வெளியிட்டுக் கர்ப்பத் தடைத் திட்டத்திற்கு ஆதரவு தேடிய தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழ் நாடு அரசு ஈடு இணையற்ற திருவிழாவாக நடத்தியது! செப்டம்பர் 17-ஆம் நாள் காலை முதல் நாள் நிகழ்ச்சிகள் மங்கள இசையுடன் தொடங்கியன.

வரலாற்று ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இந்த விழாவினை மாண்புமிகு தமிழ் நாட்டு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையேற்று நடத்தினார். மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றுகையில் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா, ஓராண்டு காலம் தொடர்ந்து நடத்தப்படும் என்றும், மாவட்டம் தோறும் நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

இப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றிய மாண்புமிகு மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள், 'தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளும், தத்துவங்களும் விவாதத்துக்குரியவையாக இருக்கலாம். ஆனால் அவரது கொள்கைகளின் அடிப்படை நிரந்தரமானது. அனைவரும் ஏற்றுக் கொள்ளும் காலம் வரும்; பெரியாரின் தத்துவங்கள், போதனைகள் ஆகியவை இந்தியா முழுவதற்கும் வழி காட்டியாக இருக்கும்' என்று கூறினார்.



ஊர்வலத்தைக் கண்டு உற்சாகமுற்ற முதல்வர்.

தந்தை பெரியார் அவர்களின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்தும், அஞ்சல் தலையை வெளியிட்டும் மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் உரையாற்றினார்! 'அறிவைப் புறக்கணிக்கும் மூடப்பழக்க வழக்கங்களை ஒதுக்கி விட்டு, பகுத்தறிவின் அடிப்படையில்தான் வாழ்க்கையை அமைக்கவேண்டும் என்பதை மக்களிடம் வலியுறுத்திக் கூறிய ஒரே தலைவர்—ஒப்பற்ற தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்தான். நீதி, நேர்மை, சமத்துவம், அறம் அனைத்தும் நிலவுகின்ற சுதந்திரச் சூழ்நிலையில் சமுதாயம் வளர்ந்து முன்னேற வேண்டுமென்பதற்காக பாடுபட்ட தீவிரச் சமுதாயச் சீர் திருத்தவாதி அவர்! அவர் பெண்ணடிமை ஒழியப் பாடுபட்டார்! பெண்களை அடிமைப்படுத்தும் அனைத்தையும் அகற்ற வேண்டும் என்று எல்லா அரசுகளையும் அவர் வலியுறுத்தினார்' எனத் தன் உரையில் மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டார்.



தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தை மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைக்க, பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் உடனிருக்கிறார்கள்.

பெண்கள் உரிமையோடு வாழக் குழந்தைகளைக் குறைவாகப் பெற வேண்டும் — அளவான குடும்பம் அமைத்து வாழ வேண்டும் — வேலை வாய்ப்புக்கள் அனைத்திலும் 50 விழுக்காடு பெண்களுக்குத் தர வேண்டும் என வலியுறுத்தி வந்த தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமைப் பேருரையாற்றினார். ''பெரியார் சமுதாயப் பணிக்காகப் பாடுபட்டார். தாய்க்குலத்திற்குச் சம உரிமை பெற்றுத் தர தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டுத் தியாகம் செய்தார். இந்த விழா கொண்டாடுவது என்னைப் பெருமைப் படுத்திக் கொள்வதற்காக அல்ல. பெரியாரின் கொள்கைக்காக இரத்தம் சிந்திய தொண்டர்களுக்கே இந்தப் பெருமையில் பங்கு உண்டு. அந்தத் தொண்டர்களுக்கு நன்றி கூறுவது முதல் கடமை. தொண்டர்களுக்கு நன்றி கூறா விட்டால் அது நாம் பெரியாருக்குச் செய்யும் துரோகமாகும்!'' என்றார்.

விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்களும், டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், பிறரும், டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், திரு. வி. வி. இராமசாமி அவர்களும் தந்தை பெரியார் அவர்களின் அருங்குணங்களை விளக்கிப் பேசினர். மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேருரைக்குப் பின் சட்டமன்ற உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் நன்றி கூறியபின் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

பிற்பகல் வ. உ. சிதம்பரனார் பூங்காவிலிருந்து நாதசுர இசை ஒலிக்க பெரியார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அலங்கார வண்டிகள் முதலியவற்றுடன் புறப்பட்ட ஊர்வலத்தை மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்தார்.

மகளிர் கருத்தரங்கில் திருமதி சௌந்திரா கைலாசம், திருமதி டி. என். அனந்தநாயகி.





மாலையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் நடந்த மகளிர் அரங்கிற்கு வந்திருந்தோரை திருமதி சுலோச்சனா சம்பத் வரவேற்று உரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர்கள் செல்வி பி. டி. சரஸ்வதி, திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோரும் மற்றவர்களும் உரையாற்றினர். இரவு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் தலைமையில் கலை நிகழ்ச்சிகளும், மதுரை சோமு அவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

18—9—78-ஆம் நாள் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்ட கருத்தரங்கமும், கவிஞர் பெருமக்கள் கலந்து கொண்ட கவியரங்கமும் சிறப்பாக நடந்து முடிந்தன. சிறப்புச் சொற்பொழிவுகளும் நடந்தேறின. பின் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் நிறைவுச் சொற்பொழிவாற்றினார். கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்றும், ஈரோட்டைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு 'பெரியார் மாவட்டம்' எனப் பெயரிடப்படும் என்றும் அவர் அறிவித்தார். மேலும் தமிழ் நாடு அரசு பெரியார் அவர்களின் நினைவாகச் செய்யவிருக்கும் பல்வேறு திட்டங்களை விளக்கிய அவர் கோவையில் அடுத்து ஏற்படும் பல்கலைக் கழகத்திற்கு 'பெரியார் பல்கலைக் கழகம்' எனப் பெயரிடப்படும் என்றார்!

அன்று மாலை நடந்த கலை, நாடக நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றினார். நிகழ்ச்சிகளுக்குப்பின் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. மொய்னுதீன் அவர்கள் நன்றி கூற, தமிழ்நாடு அரசு சீரும் சிறப்புமாக எடுத்தத் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டுத் துவக்க விழா இனிது நிறைவுற்றது.

—எஸ். முத்துராமலிங்கம்



மகளிர் கருத்தரங்கில் சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள். (கீழே) கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள்.





கவியரங்கில் கவிஞர் சுரதா.

“உண்மையான இந்தியாவைக் காண வேண்டும் என்றால் கிராமப் புறங்களுக்குச் செல்லுங்கள்!” என்றார் அண்ணல் காந்தியடிகள். பாரதத்தின் மக்கள் தொகையில் 60 விழுக்காட்டிற்கும்மேல் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். சுமார் ஐந்து லட்சத்து எழுபதினாயிரம் கிராமங்கள் நாட்டில் இருக்கின்றன. உலக அரங்கில் தோன்றி விளையாடும் விஞ்ஞான மாற்றங்கள், பாரத மண்ணில் பரபரவென்று வளர்ந்து வரும் தொழில் முன்னேற்றங்கள், மக்கள் மத்தியிலே மளமளவென்று வளர்ந்து வரும் மறுமலர்ச்சிக் கருத்துக்கள், தேசிய அளவில் மேல்


திரு. வி. லட்சுமி நரசிம்மன்

மட்ட மற்றும் மத்திய தர மக்களிடையே பரவிநிற்கும் வசதிமிக்க சுக வாழ்வு முறைகள் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் கிஞ்சிற்றும் கவலையில்லாமல், கோடானுகோடி மக்கள் இன்றும் நம்நாட்டு கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றாகும்.

பாரதத்தின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களின் வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் குடும்பநலக் கருத்துக்கள், பலகோடிப் பேர்களாக இருக்கும் இந்தப் பாமர மக்களின் உள்ளங்களிலெல்லாம் தூவித்தூவி விதைக்கப்பட வேண்டியது அவசரத்திலும் அவசரமாகும்; அந்த விதைகள் முளைவிட்டு வளர்ந்து, மணிகுலுங்கச் சிரிக்கும் படியான நிலையைத் தோற்றுவித்து, பயன்மிகுந்த அறுவடையினைச் செய்திட வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

இத்தகைய அவசரமானதும் அவசியமானதுமாக விளங்கும் பணியின் ஓர் அம்சமாகத்தான், தமிழ்நாடு குடும்ப நலத்துறை மற்றும் புதுவை வானொலி நிலையம் ஆகியவற்றின் சார்பில் கிராமியக் கலைவிழா ஒன்று தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த புவனகிரி என்னும் அழகிய சிற்றூரில் 19—9—78-ம் நாள் சிறப்புற ஏற்பாடு செய்யப் பெற்றது.

# புவனகிரித் திருவிழா!!

பெரியதொரு மாநாடு ஒன்று நடைபெறுவதைப்போல, இந்தக் கலைவிழா நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.

கலைவிழா தொடர்பான விளம்பரங்கள் மக்கள் மனதைக் கவரும் வண்ணம் கவர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்பட்டன! திரைப்பட அரங்கங்களில் எல்லாம் இவ்விழாவினைப் பற்றிய செய்தி, வண்ணச் சிலைடுகளின் மூலம் அறிவிக்கப் பெற்றது. கண்ணைப் பறித்திடும் வண்ணச் சுவரொட்டிகள் புவனகிரியிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் ஒட்டப்பெற்றன. புவனகிரிக்கு அருகில் திகழும் சிதம்பரத்திலிருந்து செல்லும் எல்லாப் பேருந்துகளிலும் இந்த வண்ணப் போஸ்டர்கள் ஒட்டப்பெற்று, அவை செல்லுமிடங்களிலெல்லாம் கிராம மக்களின் கண்களுக்குக் காட்சிப் பொருளாய் அமைந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் நடமாடும் ஊர்தியில் ஒலிபெருக்கியினை அமைத்து, பத்துமைல் சுற்றளவிற்குள்ள எல்லா குக்கிராமங்களிலும் இவ்விழாவினைப் பற்றி விளம்பரம் செய்ததுடன், விழாபற்றிய நோட்டீசுகளும் பல்லாயிரக்கணக்கில் விநியோகம் செய்யப் பெற்றன.

இந்தக் கிராமியக் கலைவிழா புவனகிரி சாமுண்டீஸ்வரி கோவில் திடலில் மாலை 6-30 மணி அளவில் நாதஸ்வர இன்னிசைக் கச்சேரியுடன் ஆரம்பமாயிற்று; கழுத்தில் பொன்னகையும்


டாக்டர் ஞானசுந்தரி

முகத்திலே புன்னகையுமாகத் திகழ்ந்த தாய்மார்கள், ஐயாயிரத் திற்கும் அதிகமாகக் கூடியிருந்த அந்தப் பெருங் கூட்டத்தில், பாதிக்கு மேல் குழுமியிருந்தார்கள்; ஆடிவரும் பொற் சித்திரங்களாகத் திகழ்ந்த சின்னஞ்சிறார்களின் கூட்டமும் அதிகம்தான்; ஆர்வமிக்க ஆடவர்களின் கூட்டமும் அதிகம்தான்.


திரு. முல்லைவளவன்

இவ்வளவு கூட்டமும் கூடியதற்கு ஓர் அடிப்படையான இரகசியமும் இருந்தது. கலைவிழாவில் நான்கு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. புவனகிரிக்கு அருகிலிருந்த ஒரு கிராமத்துக் கலைஞர்களின் பம்மைப்பாட்டு; சிதம்பரம் இசைக்கலைஞர்களின் மெல்லிசை நிகழ்ச்சி; உள்ளூர் பள்ளி மாணவர்கள் பங்கேற்று நடித்த சிறுவர் நாடகம்; உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்று நடித்த “கலியுகாசுரன் வதம்” என்ற இசைக்கூத்து நாடகம். இவ்விதம் உள்ளூர்க்காரர்களே பங்கேற்றுத் திறம்படநடிக்கும் கலை நிகழ்ச்சிகளுக்குக் கூட்டத்தைக் கேட்கவா வேண்டும்! இவ்விதம் உள்ளூர்ப் பலாப்பழத்தை உரித்து வைத்த பெருமை புதுவை வானொலி நிலையத்தையும், உரித்த பலாச்சுளைகளை தங்கத்தாம்பாளத்திலே அழகுற அடுக்கி வழங்கிய பெருமை தமிழ்நாடு குடும்ப நலத்துறையையும் சார்ந்ததாகும்.

விழா நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்திய புதுவை வானொலி நிலைய இயக்குநர் திரு. வி. லட்சுமி நரசிம்மன், “கிராமப் புறங்களில் அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் கலையார்வத்தைத் தூண்டிவிட்டு, அவர்களின் மூலமாகவே குடும்ப நலக்கருத்துக்களை மக்களுக்கு வழங்குவதன் மூலம், வெற்றிப் பாதையிலே நாம் விரைந்து நடைபோட முடியும் என்ற நம்பிக்கையில் தான் இத்தகைய கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளோம்” எனக் குறிப்பிட்டார்.


திரு. வி. நாமதேவன்

அடுத்து இக் கலைவிழாவினைத் துவக்கி வைத்துப் பேசிய மாநில குடும்ப நலத்துறை துணை இயக்குநர் (விளம்பரம்) திரு. வி. நாமதேவன், “திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் ஆரம்ப காலத்தில் இடைவெளிவிட்டுக் குழந்தை பெறும் கலையைக் கற்றுக் கொள்ளவேண்டும்; இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு மனப்பூர்வமாக முன்வந்து குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டு குடும்பத்தை அளவு படுத்திக் கொள்ளுவதில்தான், வருங் காலத்தில் இந்த நாட்டின் சுபிட்சமே அடங்கியிருக்கிறது” என்று குறிப்பிட்டார்.


திரு. பி. எஸ். பாண்டியன்

இதன் பிறகு தலைமையுரையாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. எஸ். பாண்டியன், “பெற்றோர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்; வருங்கால இளம் தலைமுறையினரின் எதிர் காலத்தை இருளடையச் செய்து விடாமல் அவர்களின் நல்வாழ்விற்கும் சுபிட்சத்திற்கும் உத்திரவாதம் அளிக்கும் வகையில் இந்தத் தலைமுறையினர்தான் குடும்பங்களை அளவுடன் வைத்துக் கொள்ளும் பணியில் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்” என்று வலியுறுத்தினார்.

அடுத்து சிறப்புரையாற்றிய தமிழ் நாடு மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் டாக்டர் ஞானதேசிகன், “அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் முயற்சியால் மட்டுமே குடும்பநலத் திட்டம் வெற்றியடைந்திட முடியாது; அரசின் முயற்சியும், மக்கள் மனமுவந்து வழங்கும் ஒத்துழைப்பும் ஒன்றுபட்டு இணையும் போதுதான் வெற்றியைக் காணமுடியும்” என்று மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய பங்கினைப்பற்றி பாங்குற விளக்கிக் கூறினார்.


டாக்டர் ஞானதேசிகன்

இதன்பிறகு சிறப்புரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. முருகேசன், “எத்தனை திட்டங்கள் போட்டு நிறைவேற்றினாலும் அவற்றின் பயன்களை மக்கள் முழுமையாகத் துய்த்திட முடியாத சூழ்நிலை இருப்பதற்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கம்தான். அறிவார்ந்த முடிவினை எடுத்து அளவாகக் குடும்பங்களை வைத்துக் கொள்ளுவதன் மூலம்தான் நாமும் சுகத்தை அனுபவிக்க முடியும். நமது வருங்காலச் செல்வக் குழந்தைகளும் சுகத்தினை அனுபவிக்க முடியும்” என்பதை அழகுற விளக்கிக் காட்டினார்.

மாவட்ட குடும்பநல அலுவலர் டாக்டர் ஞானசுந்தரி சிறப்புரையாற்றுகையில் “அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தாயும் சேயும் நலமுடன் வாழ்வதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்திருக்கின்றோம்; தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் பலவிதமான நோய்களிலிருந்தும் பாதுகாப்புக் கொடுப்பதற்காகத் தடுப்பு ஊசிகள் போடுகின்றோம்; மருந்து மாத்திரைகள் கொடுக்கின்றோம்; இந்த வசதிகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு குடும்பத்தை அளவு படுத்திக் கொள்ள வேண்டியது பெற்றோர்களின் கையில்தான் இருக்கிறது” என்று குறிப்பிட்டார்.


திரு. ஏ. முருகேசன்

அடுத்து சிறப்புரை நிகழ்த்திய மாவட்ட குடும்பநல விளம்பர அலுவலர் திரு. எஸ். மெய்யப்பன், “மருந்தைக் குடிக்க அடம் பிடிக்கும் சின்னக் குழந்தைக்குத் தாய்மார்கள் அதைத் தேனில் குழைத்து ஊட்டுவதைப்போல் குடும்பத்திற்கு தேவையான குடும்பநலக் கருத்துக்களை கலை நிகழ்ச்சியில் குழைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது; ஒரு மனைவி, இரண்டு குழந்தைகள், மூன்று விசாலமான அறைகள்கொண்ட வீடு, நான்கு சக்கரமுள்ள வண்டி அதாவது கார் இவைகளுடன் வாழ நினைக்கும் வாழ்க்கை முறையை மேற்கொள்ளுவதே சாலச் சிறந்தது” என்று குறிப்பிட்டார்.


திரு. எஸ். மெய்யப்பன்

இதன் பின்பு புதுவை வானொலி நிலைய களச்செய்தி அலுவலர் திரு. முல்லைவளவன் நன்றியுரையாற்றுகையில், “வளவாழ்விற்கு அடிப்படை, அளவான குடும்பம் அமைத்துக் கொள்ளுவதில்தான்; அதுதான் குடும்பத்தில் மகிழ்ச்சியையும் சுபிட்சத்தையும் அதிகப்படுத்தும் சக்தி வாய்ந்தது” என்று குறிப்பிட்டார்.



குடும்பநலக் கிராமியக் கலைவிழாவின் போது ஆதிமூலம் குழுவினரின் பம்பைப் பாட்டு.

இந்தக் கூட்ட நிகழ்ச்சிக்குப்பிறகு, கலைநிகழ்ச்சிகள் தொடங்கின. முதலாவதாக ஆதிமூலம் குழுவினர் வழங்கிய பம்பைப்பாட்டு, ''டண் டண் டண்'' என்ற இனிய ஒலிமுழங்க ''முத்தன்—சித்தன்'' ஆகியவர்களின் கதை இசையுடன் ஒலித்தது. அதிகக் குழந்தைகள் பெற ஆசைப்பட்ட முத்தன், முடிவில் தன் மனைவியையும் பறி கொடுத்து அவலத்தில் மூழ்குகிறான். குடும்பத்தை அளவுடன் வைத்துக் கொண்ட சித்தனோ, ஆனந்தமாகக் குடும்ப வாழ்வை அனுபவிக்கிறான். இதுதான் பம்பைப் பாட்டுக்கதை.

அடுத்து பள்ளி மாணவ மாணவிகள் நடித்த ''யானையும் பூனையும்'' என்ற சிறுவர் நாடகம்; பிரபு பணக்காரப் பையன், கண்ட நேரத்தில் கண்டதைத் தின்று உடம்பைக் கெடுத்துக் கொண்டு, பள்ளிப்பாடங்களைச் சரியாகப்படிக்கமாட்டான்; குமரப்பன் ஏழை வீட்டுப் பையன்; அப்பாவுக்கு ஒரே மகன்; முடிந்தவரை கிராமப் புறத்து சத்துணவையே உண்பவன்; வகுப்பில் முதல் மார்க் எடுப்பவன்; குமரப்பாவின் மேல் பிரபுவுக்குப் பொறாமை; ஆனால் கடைசியில் பிரபுவுக்கு வயிற்றுக்கோளாறு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அறுவை சிகிச்சை செய்யும்போது குமரப்பா தான் இரத்தம் கொடுத்து உதவ வேண்டி நேருகிறது. மனம் மாறும் பிரபு, தந்தையை இழந்து விடும் குமரப்பாவுக்கு மேற்கொண்டு படிக்க வேண்டிய உதவியை செய்கிறான். இந்தக் கதையை சிறுவர்கள் அழகுறவும், நகைச்சுவை மிளிரவும், திறம்படவும், நடித்துக் காட்டியதைக் கண்ட மக்கள் ஆரவாரித்துக் கையொலி எழுப்பினர்.

அடுத்து சிதம்பரம் கலைவாணி இசைக் குழுவினர் நடத்திய மெல்லிசை நிகழ்ச்சி ''மச்சானிடம் ஒரு சேதி'' என்ற தலைப்பில்; இதில் இனிமையான கிராமியப் பாடல்களும் கருத்தாழம் மிக்க வசன வர்ணனைகளும் நிரம்பியிருந்தன. திருமணம் செய்து கொள்ளும் புதுத்தம்பதிகளின் இனிய கனவுகள்; திருமணத்தில் லாலிப்பாட்டில் மிளிரும் கேலிக் குறும்புகள்; வயல் வெளியிலே நீர் இறைக்கும் போது ஒலிக்கும் ஏற்றப் பாட்டு; தலைப்புதல்வன் பிறந்ததும் தாங்கமுடியாத மகிழ்ச்சியிலே தாய் பாடிடும் ஆரிரோப்பாட்டு; மகன் வளர்ந்து புதுச் சொக்காய் வேண்டும் எனக் கேட்கும் குழந்தைப்பாட்டு; மகன் மருத்துவனாகி கிராமப்புறத்திற்குச் சென்று அல்லல்படும் மக்களுக்கு சேவை செய்திட வேண்டும் என்று பெற்றோர்காணும் கனவுப் பாட்டு; அளவுடன் குடும்பத்தை வைத்துக் கொண்டு ஆனந்தப்பட வேண்டும் என்ற வண்டிப்பாட்டு; அத்தனை பாடல்களிலும் இனிமை!

அடுத்து நடைபெற்றது பள்ளி ஆசிரியர்கள் பங்குபெற்று நடித்த ''கலியுகாசுரன் வதம்'' என்ற கருத்தாழம் மிக்க இசைக் கூத்து நாடகம்; கலியுகாசுரன் அக்கிரமங்களை வளர்ப்பவன்; அவனது பட்டத்துராணி அகோரவல்லி காமத்தை உலகினில் பெருக்கி மக்கள் தொகையைப் பெருக்குபவள்; இவர்களுக்கு வந்து வாய்த்த புதல்வன் வறுமையை மக்கள் மத்தியில் பரப்பும் இளவரசன் வறுமையாசுரன். இந்த வறுமையாசுரன் நீண்டநாள் தவமிருந்து, வெள்ளியங்கிரிக் கடவுள் பரமசிவனிடம் மழுவாயுதத்தாலும் சக்ராயுதத்தாலும் அழியாத வரம் பெறுகிறான். இதனால் உலகமே சீரழிகின்றது. பாரத அன்னை மக்கள் பெருக்கத்தால் நலமெல்லாம் இழந்து அவதியுறுகிறாள். சிவனிடம் வந்த மகாவிஷ்ணு, தான் காக்கும் தொழிலைச் சரிவரச் செய்ய முடியாமல் அவதிப்படுவதாக முறையிடுகிறார். அங்கு வரும் பிரம்மாவோ, தான் ஒரு நொடியும் கூட ஓய்வில்லாமல் மூன்று நொடிக்கு இரண்டு குழந்தைகள் வீதம் உற்பத்தி செய்ய வேண்டிய கஷ்டத்தை விளக்குகிறார்.

கலியுகாசுரனையும் மற்றவர்களையும் வதைக்க முடிவு எடுக்கிறார் சிவபெருமான்; ஆனால் அப்போது அங்கு வரும் நாரதர், ''மழுவாயுதத்தாலும் சக்கராயுதத்தாலும் சாகாத வரத்தை வறுமையாசுரன் பெற்றிருப்பதால் அவர்களை சிவனாலும் மகாவிஷ்ணுவாலும் கூட அழிக்க முடியாது'' என்பதை விளக்குகிறார்.

இதனால் சிவபெருமான் ஒரு புதிய அஸ்திரத்தை உண்டாக்குகிறார். அது தான் முக்கோண அஸ்திரம்.

தன் வியர்வையில் நீதிதேவன் என்பவனை உற்பத்தி செய்து, அவனிடம் இந்த முக்கோண அஸ்திரத்தைக் கொடுத்து அனுப்புகிறார். இந்த நீதிதேவன் விரைந்து சென்று வறுமையாசுரனையும், அகோரவல்லியையும், கலியுகாசுரனையும் வதைத்து உலகத்தைக் காப்பாற்றுகிறான். இது தான் கதை.

திறமையான நடிப்பும், அழகான ஒப்பனையும் உயர்தரமான ஆடை அலங்காரங்களும், காதுக்கினிய கானங்களும், கண்ணுக்கினிய நடனங்களும், கண்டவர்களின் உள்ளங்களையெல்லாம் களிப்புக் கடலில் ஆழ்த்தியது. சுருங்கச் சொல்லவேண்டுமென்றால், இந்தக் கிராமியக் கலைநிகழ்ச்சிகளுக்கு ''புவனகிரித் திருவிழா'' என்றுதான் பெயர் சூட்ட வேண்டும்.

— எஸ். மெய்யப்பன்

**அட்டையில் :**

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் குடும்பநல இருவார விழாவைத் துவக்கி வைத்த போது முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், குழந்தைகளுக்குப் பெயர் சூட்டினார்.

**பின்பக்க அட்டை :**

விழா மண்டபத்துக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று, பொதுமக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்.




# சிவகங்கையில் பட்டிமன்றம்

சிவகங்கையில் இராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் கடந்த 22—8—1978 அன்று பட்டி மன்றம் ஒன்று முகவை மாவட்ட குடும்பநலத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.


இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சா. சுப்பிரமணியன், ஐ.ஏ.எஸ். அவர்கள்தலைமையில் விழா தொடங்கியது. குடும்பநலத் துறையின் துணை இயக்குநர் (விளம்பரம்) திரு. வெ. நாமதேவன் அவர்கள் துவக்க உரையாற்றினார். மாவட்ட குடும்பநலம், மகப்பேறு மற்றும் சேய் நல அலுவலர் டாக்டர் ஆர். யுவராஜ் சிங் அவர்கள் வரவேற்புரையாற்றினார். குடும்பநலக் கல்வி மற்றும் செய்தி அலுவலர் திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்கள் நன்றி கூறினார்.

திரு. எஸ். சாலமன் பாப்பையா (பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை) நடுவராக அமைந்த பட்டி மன்றத்தில், குடும்பநலத் திட்டம் வெற்றி பெறுவதற்கு பெரிதும் துணை நிற்பது சட்டமே! மனமாற்றமே! என இரு அணிகள் வாதிட்டன. சட்டமே என்ற அணிக்கு திரு. கு. சொல்விளங்கும் பெருமாள் (பேராசிரியர், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை) தலைமை வகிக்க அந்த அணியில் திரு. உ. பில்லப்பன், (வழக்கறிஞர், சிவகங்கை) அவர்களும்,



மாவட்ட குடும்பநல விளம்பர அலுவலர் திரு. ஆர். இராமச்சந்திரன் நன்றியுரையாற்றுகிறார்.

சிவகங்கை குடும்பநலப் பட்டி மன்றத்தில் வாதிட்டோர்.




திருமதி இராசம் மரகதம் (மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை) அவர்களும் கலந்து கொண்டு வாதிட்டார்கள். மனமாற்றமே என்ற அணிக்கு டாக்டர் திருமதி சக்தி பெருமாள் (பேராசிரியை, பாத்திமாக் கல்லூரி, மதுரை) அவர்கள் தலைமையில் திரு.இராஜாராம்(துணைப்பேராசிரியர், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை) அவர்களும், திரு. வி.ஆர். நாகராஜன் (அரசர் மேல்நிலைப் பள்ளி சிவகங்கை) அவர்களும் கலந்து கொண்டு வாதிட்டார்கள்.

இரண்டு அணிகளின்வாதத்திற்குப் பின் முடிவில், நடுவர் தனது தீர்ப்பில் குடும்பநலத் திட்டம் வெற்றிபெற துணை நிற்பது மனமாற்றமே என தீர்ப்பு வழங்கினார்.

# சென்னையில் நிரோத் விற்பனைப் போட்டி

**பொது** மக்களிடையே குடும்பநல தற்காலிக சாதனமான 'நிரோத்' தைப் பெருமளவில் விளம்பரப் படுத்தவும், அதே தருணத்தில் நிரோத் விற்பனையை மக்களிடையே அதிகப் படுத்தவும் 'நிரோத் விற்பனை ஊக்கப் படுத்தும் போட்டி' சென்னையில் கடந்த ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாதக்காலங்களுக்கு நடைபெற்றது. இதற்காக சென்னை மாநகரில் பல்வேறிடங்களிலுள்ள 150 விற்பனைக் கடைகள் தேர்ந்தெடுக்கப் பட்டன.

ஐந்து குரோஸ் நிரோத்தை ஒரே நேரத்தில் விற்பனைக்கு வாங்கும் மொத்த விற்பனையாளர்களுக்கு, ஒவ்வொரு முறையும் வரிசைக்கிரமமாக எண்கள் அச்சடிக்கப் பட்ட பச்சைநிற கூப்பன்கள் வழங்கப் பட்டன. இதைப் போலவே மொத்த விற்பனையாளர்கள், ஒரே நேரத்தில் ஒரு டஜன் நிரோத் வாங்கும் சில்லறை விற்பனையாளர்களுக்கும், விலைகொடுத்து வாங்கும் பொதுமக்களுக்கும், வரிசைக்கிரமமாக எண்கள் அச்சடிக்கப்பட்ட வெள்ளை நிற கூப்பன்களை வழங்கினார்கள்.

இரண்டு மாதமாக இடைவிடாமல் நடைபெற்ற விற்பனைப்போட்டியின் பரிசுக் குலுக்கல் 20—9—78 அன்று மாநில குடும்ப நலச் செயலகத்தின் மக்கள் கல்வி, தகவல் அதிகாரி திரு. எஸ். அப்பர் சுந்தரம் மேற்பார்வையில் நடைபெற்றது.

21—9—78 அன்று கீழ்ப்பாக்கம் சில்வின் லாட்ஜ் காலனியிலுள்ள பிரதம விற்பனையாளரான திரு. வி. எஸ். தண்டபாணி அவர்களின் அலுவலகத்தில் நிரோத் விற்பனை பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மத்திய அரசு மண்டல சுகாதார அலுவலர் டாக்டர் கே. பி. எம். பிரபு தலைமை தாங்க, குலுக்கலில் பரிசு பெற்ற 42 பேர்களுக்கு மாநில குடும்ப நலச் செயலக துணை இயக்குநர் டாக்டர் திருமதி பி. லட்சுமி, பரிசுகளை வழங்கினார்கள். விற்பனைப் போட்டியின் நோக்கத்தையும், வெற்றியையும் குறித்து மக்கள் கல்வி, தகவல் அலுவலர் திரு. எஸ். அப்பர் சுந்தரம் உரையாற்றினார்.

சென்னை மாநகரில் சீரோடும் சிறப்போடும் அதே நேரத்தில் விற்பனையில் வெற்றிகரமாகவும் நிரோத் விற்பனைப் போட்டியை நடத்திய பெருமை இம்பீரியல் டுபேக்கோ கம்பெனியைச் சாரும். பொது மக்களிடமிருந்தும், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோரிடமிருந்தும் பெருமளவு ஆதரவை இம்முறை இப்போட்டி பெற்றது என்று பெருமையுடன் கூறலாம்.

—எஸ். அப்பர் சுந்தரம்



திருக்கோவிலூரில் நடந்த தொழுநோய்த் தடுப்பு மருத்துவமனை திறப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், தெ. ஆ. மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் மேஜர் (செல்வி) இ. எம். சரஸ்வதி ஆற்றிவரும் பணியைப் பாராட்டி, தஞ்சாவூர் தட்டு ஒன்றைப் பரிசாக வழங்குகிறார்.




நிரோத் விநியோக பரிசளிப்பு விழாவில், மாநில குடும்பநல துணை இயக்குநர் டாக்டர் திருமதி லட்சுமி அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிக்கிறார். (கீழே) மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு. எஸ். அப்பர் சுந்தரம் அவர்களால் பரிசு குலுக்கல் நடைபெறுகிறது.






600 008
159880







மத்திய அரசு அனுப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட 'மனநலக் குழு' செப்டம்பர் 11, 12, தேதிகளில் சென்னைக்கு வருகை தந்தது முன்னால் மத்திய அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் தலைமையில் வந்த இக்குழுவினர், சென்னை மனநல மருத்துவமனையைப் பார்வையிட்டு, [illegible]














Registered No. RN 28061/71
Registered No. TN/MS.C/130



Printed and Published by S. GNANADESIKAN, M.D., Director of Medical Services and Family Welfare [Incharge]
at No. 49, Pantheon Road, Madras 600 008 — State Family Welfare Press, 79/81, Anna Salai, Madras - 600006.
Editor : K. G. RADHAMANALAN, Assistant Editor : S. MUTHURAMALINGAM.